பந்து 03 பக்கங்கள் 28 மே, 2013

# வெற்றிக் ஸ்டேடியம்

ஜெயிக்கும் வரை விளையாடு


மாத இதழ்

ரூ.60







களைகட்டும் ஐ.பி.எல் போட்டிகள்
பக்கம் 01



ஸ்ரீலங்கா கிரிக்கெட் தேர்வுகளும் குழப்பங்களும்
பக்கம் 07



விளையாட்டில் அரசியல் தலையீடு கவலைக்குரியது
பக்கம் 13



The World Navigators (Pvt) Ltd
Customer Satisfaction Is The Key For Our Business
Our Services..
Air Ticket Booking
Holiday Packages
Wedding and Honeymoon Packages
Immigration Consultancy
WE DO MANY OTHER SERVICES FOR YOUR COMFORTABLE LIVING
CALL US ANYTIME, ANYWHERE, ANY DAY FOR...
0094 11 7905089
Join with us to make your life easier
0094 11 205 5499
33A, W.A.Silva Mw, Colombo - 06
Tel : 0094 117905089, Hotline : 0094 772598250, E-mail : theworldnavigators@gmail.com




JSP
All Printing Solutions Under One Roof
JEYASRI
Printers
50,College Road, Neeraviyadi, Jaffna.
T:+94 (0) 21221 9129
M:+94 (0) 77583 4835
+94 (0) 77654 1501
E: jeyasriprinters82@gmail.com




WEDDING CAR FOR HIRE
CONTACT :
0775026827




கணிதம்
பிரத்தியேக வகுப்பு
தரம் 6 முதல் 11 வரை (குழு மற்றும் தனி)
தொடர்புகளுக்கு :
0778257641



சுதந்திரநாதன்
அனுதினன்

# 6வது வருடமும் களைகட்டும் IPL

சர்வேதேச கிரிக்கெட் போட்டிகளின் விடுமுறை காலம் எது? என்று கேள்வி கேட்டால், சற்றும் சிந்திக்காது விடை தரலாம் ஐ.பி.எல் போட்டிகள் இடம்பெறும் காலம் என்று! அந்தளவுக்கு ஐ.பி.எல் போட்டிகளில் புரளும் பணம், இந்திய கிரிக்கெட் சபையின் ஆதிக்கம் இவை இரண்டுமே, சர்வதேச கிரிக்கெட் சபையின் கைகளை கட்டிப்போட்டு இருக்கிறது. இவற்றை எல்லாம் தாண்டி, ஐ.பி.எல் போட்டிகள் கலையை வியாபாரமாக்கி அதை கிரிக்கெட்டை விரும்பும் ரசிகர்களிடம் கொண்டு சேர்த்திருப்பதன் மூலமாக, இம்முறை ஆறாவது சீசன் போட்டிகளையும் நடாத்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இம்முறை ஆறாவது ஐ.பி.எல் போட்டிகள் அனைத்தும் 52 நாட்களில் 76 (அரையிறுதி மற்றும் இறுதிபோட்டிகளையும் உள்ளடக்கி) போட்டிகளை கொண்டதாக இடம்பெற உள்ளது. இம்முறையும் 9 அணிகள் கடந்த முறை போலவே போட்டிகளில் பங்குபற்ற உள்ளபோதிலும், கடந்தமுறை போட்டிகளில் பங்குபற்றிய டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு பதிலாக, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி விளையாட உள்ளமை குறிப்பிடத்தக்கது. டெக்கான் நிறுவனத்தின் உரிமை மாற்றம் காரணமாகவே, இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இருமுறை சென்னை சூப்பர் கிங்ஸ்ஸும், ராஜஸ்தான் ரோயல்ஸ், டெக்கன் சார்ஜர்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகியோர் வெற்றிக்கிண்ணத்தை வென்றுள்ள நிலையில், ஆறாவது முறையாக இடம்பெறும் ஐ.பி.எல் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தையும், பத்து கோடி ரூபா பணப்பரிசையும் யார் வெல்லப் போகிறார்கள்? என்பதே தற்போதைய நிலையில் பலரதும் எதிர்பார்ப்பு!

## இம்முறை போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளை முன்னோட்டமாக பார்க்கலாம்

### கல்கத்தா நைட் ரைடர்ஸ்

நடிகர் ஷாருக்கானால் கொள்வனவு செய்யபட்டு, கௌதம் கம்பீரால் தற்போது வழிநடாத்தப்படும் இந்த அணிதான் கடந்தமுறை சாம்பியன் பட்டத்தை வென்ற அணி.

அந்த வகையில், இந்த அணி மீது மிகுந்த எதிர்பார்ப்பு இந்த வருடமும் எழுந்துள்ளமை இயல்பே! ஐ.பி.எல் வர்த்தகத்தில் எந்த சந்தர்ப்பத்திலும், நட்ட நிலையை எதிர்நோக்காத அணி என்கிற பெருமை இந்த அணிக்கு இருக்கிறது.

இம்முறை ஆஸ்திரேலியா அணியின் பிரெட் ஹடின், பிரட் லீ, ஜேம்ஸ் பட்டின்சன் ஆகியோரும், தென்னாபிரிக்க அணியின் ஜக் கல்லிஸ், ரேயன் மக்லரென் ஆகியோருடன், சுனில் நரைன், இயன் மோர்கன், பிரெண்டன் மக்கலம், சசித்திர சேனநாயக்க, சகிப் அல் ஹசன், ரேயான் தோஸ்த்தபே ஆகியோரும் வெளிநாட்டு வீரர்களாக இருக்கிறார்கள். இவர்களை தவிரவும், உள்நாட்டில் பிரகாசிக்கும் வீரர்களாக இருக்கும் மனோஜ் திவாரி, பிஸ்லா, பாலாஜி, பாத்தியா ஆகியோர் இருப்பது பலமே!

இருப்பினும், கடந்த முறை இந்த அணி பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட காரணமாக இருந்த வசீம் அக்ரம் பந்துவீச்சு பயிற்சியிலிருந்து விலகியிருப்பது, அணிக்கு பின்னடைவாக உள்ளபோதிலும், அணியை சரியான பாதையில் கொண்டு செல்லகூடிய வெளிநாட்டு வீரர்களும், பயிற்சியாளர் ட்றேவேர்ஸ் பெயிலிஸ்சும் அணியில் இருக்கிறார்கள். கடந்த முறை வென்ற கிண்ணத்தை தக்கவைத்து கொள்ளுவதோ அல்லது முந்தைய காலங்கள் போல, தகுதிநிலையை இழப்பதோ அவர்கள் கையில்தான் இருக்கிறது.

### சென்னை சூப்பர் சிக்ஸ்

வழமைபோல மகேந்திரசிங் தோனியின் தலைமையிலும், ஸ்டீபன் பிளெமிங் பயிற்சியிலும் களமிறங்கும் அணியாக இது உள்ளது. இருமுறை கிண்ணத்தை வென்றுள்ளதுடன், இருமுறை இறுதிப்போட்டியை எட்டிபார்த்துள்ள பலமிக்க அணியாக உள்ளது. ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பிக்கும்போது, ஒவ்வொருமுறையும் தோல்வி நிலையுடன் ஆரம்பித்து, பின்பு விஸ்வரூபம் எடுக்கும் அணி என்பதுடன், இந்த அணிக்கு பலம்சேர்க்கவென பிராவோ, டூ பிளிசஸ், பென் கில்வன்கோஸ், மைக்கல் ஹசி, ஜாசன் ஹோல்டர், அல்பி மோர்க்கல், டிரக் நனஸ் ஆகிய வெளிநாட்டு வீரர்கள் உள்ளனர்.



இவ்வணியில் விளையாட அழைக்கப்பட்ட நுவான் குலசேகர, அகில தனஞ்சேய ஆகிய இலங்கை வீரர்களை சென்னை சூப்பர் கிங்ஸ் நிர்வாகம் அரசியல் காரணங்களுக்காக இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதுபோல, பலமிக்க இந்திய தேசிய அணியின் மிகசிறந்த பல இளம் வீரர்களாகிய அஸ்வின், பத்திரிநாத், ரைனா, முரளி விஜய் ஆகியோர் சென்னை அணியில் இருப்பதும் அணிக்கு சாதகமே!

இம்முறையும், கிண்ணத்தை வெல்லக்கூடிய ஒரு அணியாக இந்த அணி உள்ளபோதிலும், அவர்களது அதிர்ஷ்டம் மற்றும் டுவெண்டி 20 போட்டிகளில் ஏற்படும் துரித கதியிலான முடிவுகளின் மாற்றம் என்பனவும் அவர்களது வெற்றிக்கோப்பைக்கான கனவை தகர்க்கும் காரணியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**டெல்லி டேயார்டெவில்ஸ்**

மிகப்பலமான அணியாக ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பித்த காலம் முதலே கணிக்கபட்டு வந்தாலும், இதுவரை கிண்ணத்தை கைப்பற்றாத குறையுடன் இம்முறையும் போட்டிகளுக்குள் வந்திருக்கிறது.

இலங்கை அணியின் சிறந்த தலைவர்களில் ஒருவரான மகேல ஜயவர்த்தன தலைமையில் இம்முறையும் கோப்பைக்கான கனவுடன் களமிறங்குகிறார்கள். டெல்லி டேயர்டெவில்ஸ் அணியை பொறுத்தவரையில், டெல்லியின் சொந்த இடத்து சிங்கமாக அதிரடி ஆட்டக்காரர் சேவாக் அணியிலிருப்பது மிகப்பெரிய பலமே!

எனினும், இந்திய டெஸ்ட் அணியில் இடமிழந்துள்ள சேவாக் தனது திறமையை நிரூபிக்கக்கூடிய களமாகவும் இந்த ஐ.பி.எல் போட்டிகளை பயன்படுத்திகொள்ள நேரிடும் என்கிற எதிர்பார்ப்பு பலரிடமும் இருக்கிறது. இவரை தவிரவும், இந்திய அணியின் வருண் ஆரோன், 19 வயதுக்குட்பட்ட இந்திய சாம்பியன் அணியின் தலைவர் உன்முகுந்த் சந்த், இர்பான் பதான், நேஹெரா, உமேஷ் யாதவ் ஆகியோர் இருப்பதுடன், வெளிநாட்டு வீரர்களில் கெவின் பீற்றர்சன், டேவிட் வார்னர், ஜீவன் மெண்டிஸ் உட்பட மேலும் 5 வீரர்கள் அணியிலிருகிறார்கள். இவர்களில் டெல்லி அணியின் தலைவர் வெளிநாட்டு வீரராக உள்ளதன் காரணமாக, மேலும் 3 வீரர்களுக்கே ஒரே போட்டியில் விளையாட வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதால், எப்படி சரியான வீரர்களை பயன்படுத்தி அணியின் சமநிலையை பேணப்போகிறார்கள் என்பதே இப்போதைக்கு அணிக்கு உள்ள பிரச்சனையாக இருக்கப் போகிறது.

**பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்**

ஐ.பி.எல் போட்டிகளின் வரலாற்றில் மறக்கமுடியாத அணியாக இதனை சொல்லலாம். காரணம் இரண்டு பேர். ஒருவர் கிறிஸ் கெய்ல் மற்றையவர் அணியின் உரிமையாளர் விஜய் மல்லையா.

ஒவ்வொருமுறை போட்டிகள் ஆரம்பிக்கும் போது வருகின்ற உரிமையாளர் பற்றிய சர்ச்சைகளும், போட்டி ஆரம்பித்த பின்பு கிறிஸ் கெயில் துடுப்பால் காட்டும் வாணவேடிக்கையும் மறக்க முடியாதவை. ஐ.பி.எல் போட்டிகளை பலரும் கெயிலின் துடுப்பாட்டத்துக்காகவும் பார்ப்பது உண்டு. இன்றுவரை, ஐ.பி.எல் போட்டிகளில் அதிகூடிய சிக்ஸர்கள் என்ற பல சாதனைகளை தன்னகத்தே கொண்டு இருக்கிறார்.

இப்படியான ஒருவரையும், பல பிரபலமான வீரர்களையும் வைத்து கொண்டும் இதுவரை ஐ.பி.எல் போட்டிகளில் கிண்ணத்தை வெற்றிகொள்ளாத அணியாக பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி உள்ளது. இது டுவெண்டி 20 போட்டிகள் முன்கூட்டியே நிர்ணயிக்க முடியாத போட்டிகள் என்பதற்கு சான்று.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி இம்முறை இந்தியாவின் இளம் நம்பிக்கை நட்சத்திர வீரர் விராத் கோலி தலைமையில் களமிறங்குகிறது. இந்த அணியில், இந்திய தேசிய அணியின் வீரர்களான முரளி கார்த்திக், சகீர்கான், ஆர்பி சிங், வினய் குமார் ஆகியோருடன் மிகச்சிறந்த வெளிநாட்டு வீரர்களான முரளிதரன், டீ வில்லியர்ஸ், விட்டோரி, ஆஸ்திரேலிய அணியின் இளம்வீரர் மோசஸ் ஹென்றிஹியூஸ் ஆகியோருடன் கிறிஸ் கெயிலும் இருக்கிறார். இதுவரை இருமுறை இறுதிப்போட்டிக்கு வந்தமை அதிகபட்ச சாதனையாக உள்ளபோதிலும், கிண்ணத்தை ஒருமுறையேனும் வெற்றிபெற்று விடவேண்டும் என்கிற எண்ணத்தில் இம்முறையும் களமிறங்க போகிறார்கள். எதை சாதிக்க போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

**கிங்க்ஸ் லெவன் பஞ்சாப்**

ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பித்த காலம் முதல் தங்களை சரிவர நிலைநிறுத்திக்கொள்ளாத அணியாக இந்த அணியை சொல்லலாம். ஒருமுறை ஐ.பி.எல் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட்டை அணிக்குள் கொண்டு வருவதன் மூலம், அணியில் மாற்றங்களை செய்ய முயன்றும் முடியாமல் திணறிக்கொண்டிருக்கும் அணிகளில் ஒன்று. இம்முறையும், கில்கிறிஸ்ட் தலைமையில் அசார் முகமட், டேவிட் ஹஸி, ஷோன் மார்ஷ் போன்ற பிரபலமான வெளிநாட்டு வீரர்களுடன் ஐ.பி.எல் போட்டி என்று வந்துவிட்டால் கலக்கும் போல் வல்தாட்டி, பியூஸ் சாவ்லா ஆகியோரும் உள்ளனர்.

பெரும்பாலும், கில்கிறிஸ்ட் பஞ்சாப் அணியின் தலைமையை ஏற்றபின்பு, ஆஸ்திரேலிய அணியின் இரண்டாம் தலைமுறை வீரர்களுக்கு ஆசிய துணைக்கண்டத்தில் வாய்ப்புக்களை வழங்குகிறார் என்கிற குற்றச்சாட்டும் உள்ளது. அதற்கு ஏற்ப, ஆஸ்திரேலிய அணியின் பல இரண்டாம் தலைமுறை வீரர்களும் மற்ற அணியிலும் பார்க்க இந்த அணியிலிருப்பது கவனிக்கதக்கது. இந்த வருடம் கில்கிறிஸ்ட் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடும் இறுதிக்காலமாக உள்ளதால், வெற்றியுடன் விடைபெற முயற்சி செய்வார் என்று எதிர்பார்க்கலாம்.

**ராஜஸ்த்தான் ரோயல்ஸ்**

ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது வருடத்தின் அதிர்ச்சி சாம்பியன்ஸ் என்று இவர்களை குறிப்பிடலாம். யாரும் எதிர்பார்க்காத வகையில், முதலாவது வருடத்தில் இறுதிப்போட்டிவரை முன்னேறி கிண்ணத்தை கைப்பற்றியிருந்தார்கள். ஷேன் வார்ன் தலைமையை துறந்தபின்பு, கடந்த வருடத்திலிருந்து ராகுல் ராவிட் தலைமை பதவியையேற்று இருக்கிறார். இவருக்கு பக்கபலமாக பிரட் ஹோட்க், ஹோட்ஜ், குசல் பெரேரா, ஓவை ஷா, சோன் டைட், வாட்சன் ஆகியோருடன் இந்திய தேசிய அணிவீரர்களான ஸ்ரீசாந்த், ரகானே ஆகியோரும் உள்ளனர். இலங்கை அணியில் தற்போது அதிரடி ஆட்டம் காட்டும் குசல் ஜனித் பெரேரா இந்த அணியிலிருப்பது இவர்களது மேலதிகபலம் என்றே சொல்லலாம். பொறுத்திருந்து பார்ப்போம், மீண்டும் ஒருமுறை கிண்ணம் வென்று சாதனை படைப்பார்களா என?

## புனே வாரியஸ்

ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பித்த பின்பு, 2011ம் ஆண்டில் இணைந்துகொண்ட அணியாகும். இரண்டு வருடங்களில் எதிர்பார்த்தளவு மாற்றங்கள் இல்லாதபோதும் எதிர்பார்க்கப் படுகிற ஒரு அணியாக இருந்தே வந்திருக்கிறது.

இதற்கு காரணம், அந்த அணியிலிருந்த சவுரவ் கங்குலி. தற்போது அவர் ஓய்வுபெற்றுவிட்ட நிலையில் அணிக்குள் தலைவராக்கபட்ட மைக்கல் கிளார்க்கும் காயம் காரணமாக விலகிக்கொள்ள, அஞ்சலோ மத்தியூஸ் தலைமையில் களமிறங்கி இருக்கிறார்கள். இலங்கை அணியின் புதிய தலைவராக பதவியேற்று சில போட்டிகளை விளையாடி உள்ள நிலையில், இந்த பதவி மத்தியூஸ்க்கு அதிக அழுத்தங்களையும் , அனுபவங்களையும் வழங்குமென்ற எதிர்பார்க்கலாம். இந்த அணியில் ஏரோன் பிஞ்ச், மிச்சல் மார்ஷ், ஸ்டீவன் ஸ்மித் ஆகியோர் இருக்கிறார்கள். பார்க்கலாம் புதிய தலைமையிலாவது சாதித்து காட்டுவார்களா என்று?

## சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

டெக்கன் அணியை இனிவரும் காலங்களில் ஐ.பி.எல் போட்டிகளில் பிரதிநிதித்துவம் செய்யப் போகின்ற அணியாக இந்த அணியிருக்கபோகிறது. இலங்கையின் குமார் சங்கக்கார தலைமையில் மீண்டும் ஒரு முறை களமிறங்க போகிறார்கள்.

அத்துடன், டெக்கன் என்ற பெயர் இருந்த சந்தர்ப்பத்தில் ஒருமுறை ஐ.பி.எல் கிண்ணத்தை வென்ற பெருமையும் இந்த அணிக்கு சொந்தமாக இருக்கிறது. அந்த ஐ.பி.எல் போட்டிகள் அனைத்துமே தென்னாபிரிக்க நாட்டில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்திய மண்ணில் இதுவரை தங்களை சரிவர வெளிக்காட்டி கொள்ளாத அணியாக உள்ளநிலையில், இந்த வருடம் அந்த நிலையை புதிய அணிக்குழுமமும், அணிவீரர்களும் மாற்றி காட்டுவார்களா என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

## மும்பை இந்தியன்ஸ்

டெல்லி டெயாடெவில்ஸ் அணி போலவே அதிகமான நட்சத்திரங்களைக் கொண்டிருந்தாலும் இதுவரை ஐ.பி.எல் கிண்ணமொன்றை வெற்றி கொள்ளாத அணியாக இவ்வணி உள்ளது. சச்சின் டெண்டுல்கர், ஹர்பஜன் சிங் என் இரண்டு தலைவர்களைக் கொண்டு அவ்வணி இந்த 5 பருவகாலங்களிலும் செயற்பட்டாலும், முக்கியமான போட்டிகளைத் தோற்று தொடரிலிருந்து வெளியேறும் துரதிர்ஷ்டத்தைக் கொண்டதாக அவ்வணி காணப்பட்டு வந்திருக்கிறது.

இம்முறை ரிக்கி பொன்டிங் தலைவராக அறிவிக்கப்பட்டிருக்கிறார், அதன் மூலம் சிறந்த தலைவரொன்றை அவ்வணி பெற்றுக் கொண்டுள்ளதுடன், புதிய போராட்டத் தன்மையொன்றைப் பெற்றுள்ளது.

ஆகவே இந்தத் தலைமை மாற்றம் அவ்வணிக்கு மாற்றங்களை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகிறது. தலைவராக ரிக்கி பொன்டிங் நிச்சயமாகப் பங்குபற்றுவார் என்ற நிலையில், லசித் மலிங்க, கெரான் பொலார்ட் ஆகிய வீரர்களும் நிச்சயமாகப் பங்குபற்றுவார்கள் என்ற நிலையில், இறுதி ஒரு வெளிநாட்டு வீரருக்கான இடத்துக்கு மில்லியன் டொலர்களுக்கு வாங்கப்பட்ட மிச்சேல் ஜோன்சன், டுவைன் ஸ்மித், ஜேம்ஸ் ஃபிராங்ளின் ஆகிய வீரர்கள் போட்டியிடவுள்ளனர். வெளிநாட்டு வீரர்களைத் தவிர, சச்சின் டெண்டுல்கர், ஹர்பஜன் சிங், முனாஃப் பட்டேல், பிரக்ஜான் ஓஜா, அம்பத்தி ராயுடு போன்ற மிகச்சிறப்பான வீரர்கள் உள்ள அணி இம்முறையாவது வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளுமா?

ஐ.பி.எல் போட்டிகள் கிரிக்கெட் போட்டிகளை எப்படி வணிகமயபடுத்தலாம் என்பதற்கு மிகச் சரியான உதாரணமாகும். அனால், அதையும் தாண்டி கிரிக்கெட்டின் உன்னதமான அணிவீரர்களும் ஒன்றிணைந்து விளையாடக்கூடிய ஒரு போட்டி தொடராகவும், இந்த போட்டிகள் அமைந்து இருக்கிறது. எதிர் வரும் இரண்டு மாதங்களும் முழுமையாக ஐ.பி.எல் போட்டிகளால் ஆக்கிரமிக்கபட இருக்கிறது. அதுபோல, இலங்கையின் அரசியல் சர்ச்சைகளும், இம்முறை ஐ.பி.எல் போட்டிகள் மீது அதிகளவிலான எதிர்பார்ப்பையும், எதிர்ப்பையும் சம்பாதித்து தந்திருக்கிறது. அத்துடன், ஐ.பி.எல் போட்டிகள் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கலந்துவிட்டது. எனவே, இந்தமுறையும் களியாட்டங்களுக்கு பஞ்சமில்லாத அதிரடி ஆட்டங்களுக்கும் விறுவிறுப்புக்கு பங்கமில்லாத ஒரு தொடரை எதிர்பார்க்கலாம்.





ஐ.பி.எல் தொடக்கவிழா
கலைநிகழ்வுகள்

# சமனிலையில் நிறைவு பெற்ற

# 'இந்துக்களின் போர்'



கனகநாயகம்
யசோதரன்

'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக் குமிடையிலான இரண்டு நாள் இன்னிங்ஸ் கிரிக்கட் போட்டியின் ஆறாவது ஆண்டுக்கான போட்டி கடந்த மார்ச் 12, 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்தப் போட்டி சமனிலையில் நிறைவடைந்தது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். அதன்படி களமிறங்கிய அவ்வணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான தொடக்கத்தை வழங்கினர். சத்யன் - நிதர்சன் ஆகிய இருவரும் மிக நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார்கள். அவ்வணி 107 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அவர்களது முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. பின்னர் சுதாகரித்துக் கொண்ட யாழ் இந்து அணியினர் மளமளவென விக்கெட்டுக்களைச் சரித்தனர்.

கொக்குவில் இந்து சார்பாக சத்யன் 70 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையவர்கள் மந்த கதியில் ஆட 195 ஓட்டங்களுக்குள் அவர்களின் முதல் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது. பங்குஜன் 16, சிலோஜன் 14, பார்த்தீபன் 13, நிதர்சன் 11 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக அவ்வணிக்கு 53 ஓட்டங்கள் கிடைக்கப்பெற்றன. பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக 22.2 ஓவர்கள் பந்துவீசிய மதுஷன் 5 விக்கெட்டுக்களையும், ஷாரங்கன் 3 விக்கெட்டுக்களையும், வாமனன், கல்கோகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் ஆடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் கொக்குவில் இந்துவின் பந்துவீச்சை சமாளிக்கச் சற்றுத் திணறினர். அவ்வணி, முன்வரிசை ஆட்டக்காரர்களை விரைவாக இழந்தாலும், அணித்தலைவர் வாமணனின் 33 ஓட்டங்களின் உதவியுடனும், சஜீகனின் 30 ஓட்டங்களின் துணையோடும் 168 ஓட்டங்கள் என்ற இலக்கைப் பெற்று அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சிலோஜன் 54 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 50 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

23 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி, வெற்றியைப் பெறும் முனைப்புடன் கணிசமான ஓட்ட இலக்கை நிர்ணயிக்கும் முகமாக அடித்தாடி ஓட்டங்களைக் குவித்தது. அவ்வணியின் முதலாவது விக்கெட் 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சத்யன் - பங்குஜன் ஆகியோர் இணைப்பாட்டமாக 101 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் கொக்குவில் இந்து அணியினர் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்தி 240 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை யாழ் இந்துக்கல்லூரி அணிக்கு வழங்கியது. துடுப்பாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாக சத்யன் 100 ஓட்டங்களையும், பங்குஜன் 28 ஓட்டங்களையும், நிதர்சன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக ஷாரங்கன் 5 விக்கெட்டுக்களையும் , மதுஷன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை விரட்டத்தொடங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் 28 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது,



படங்கள் : எஸ்.ஜனகன்

போட்டிக்கான நேரம் நிறைவடைந்து, போட்டி சமனிலையில் நிறைவடைந்தது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக சஜீகன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், கல்கோகன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பாகப் பார்த்தீபன், பங்குஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியில் கொக்குவில் இந்து கல்லூரி அணியின் வேகப்பந்து வீச்சாளர் கமலயோகேஸ்வரன் சிலோஜன், ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துவீச்சாளராக 5 இலக்குகளை கைப்பற்றிய யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணியின் கிரிகரன் மதுசனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சதம் பெற்ற கொக்குவில் இந்து கல்லூரி அணியின் தேவராஜா சத்தியனும், சிறந்த களத்தடுப்பாளராக கொக்குவில் இந்து கல்லூரியின் அணித்தலைவரும் விக்கெட் காப்பாளருமாகிய லோகராஜா ஆதித்தனும் தெரிவானார்கள். இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையிலான 'இந்துக்களின் போர்' இதுவரை ஆறு தடவைகள் இடம்பெற்றுள்ளன. இதில், கொக்குவில் இந்துக்கல்லூரி அணி ஒரு வெற்றியைப் பெற்றுள்ளது. ஏனைய ஐந்து போட்டிகளும் சமனிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.


### சபாலிங்கம் கிண்ணத்திற்கான ஒருநாள் ஆட்டத்தில் யாழ் இந்து வெற்றி


இவ்விரு அணிகளுக்கிடையிலான சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 பந்துபரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி கடந்த மார்ச் 18ஆம் திகதி கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்தப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்து கல்லூரி அணித்தலைவர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

45 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து கல்லூரி அணி, பங்குஜன், அணித்தலைவர் ஆதித்தன் ஆகியோர் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 41.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 191 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பங்குஜன் 60 ஓட்டங்களையும், ஆதித்தன் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி சார்பாக, மதுசன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

192 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணி, கல்கோகன், சஜீகன் ஆகியோரின் இணைப்பாட்டம், அணித்தலைவர் வாமணனின், இறுதி நேர அதிரடியாட்டம் என்பவற்றினால், 43.1 பந்துபரிமாற்றங்களில் 7 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் கல்கோகன் 57, சஜீகன் 35, வாமணன் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக யாழ்.இந்து அணியின் தலைவர் விஜயபாலன் வாமணன் தெரிவு செய்யப்பட்டார்.








# இலங்கைக்கு கடும் சவாலை வழங்கிய பங்களாதேஷ்





அருட்பிரகாசம் புறுனோ

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள், ஒரு டுவென்டி 20 போட்டி கொண்ட முழுமையான தொடர் கடந்த மாதம் நடைபெற்று முடிந்துள்ளது. இலங்கை இத்தொடரின் டெஸ்ட் மற்றும் டுவென்டி 20 தொடரைக் கைப்பற்றி இருந் தாலும், சரியான முறையில் திறமைகளை வெளிபடுத்திய தங்களை நிரூபித்த அணியாக பங்களாதேஷ் காணப் படுகின்றது. முக்கிய வீரர்கள் சிலரின் உபாதைகள், அனுபவமற்ற இளம் வீரர்கள் குறிப்பாக போட்டிகளில் அவர் கள் விட்ட களத்தடுப்பு தவறுகள் போன்றனவே பங் களாதேஷ் அணி வெற்றியைப் பெறத் தவறிய முக்கிய காரணங்களாகும்.


இத்தொடரிற்கு தாயாராகிய இலங்கை அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்த விடயம் இலங்கையின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனாவின் உபாதை யாகும். இத்தொடரின் இறுதி பகுதியில் மஹேல உடற்தகுதி அடைந்திருந்த போதும், இளம் வீரர்களை களமிறக்குவதற் காக அவர் அணிக்கு மீள அழைக்கப்படாதிருந்தார். அதேபோன்று இலங்கை டெஸ்ட் அணியின் தூணாக அண் மைய வருடங்களில் விளங்கும் திலான் சமரவீர அணித்தேர் வின் சர்ச்சையைத் தொடர்ந்து ஓய்வை அறிவித்திருந்தார்.

இத்தொடர் இலங்கை அணிக்கு பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் வாய்ந்தாகக் கருதப்பட்டது. இவ்வருட ஆரம் பத்தில் மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளுக்கும் இலங்கையணியின் தலைவராக நியமிக்கப்பட்ட அஞ்ஜெ லோ மத்தியூஸிடம் இருந்து டுவென்டி 20 போட்டிக்கான தலைமை பிடுங்கப்பட்டு தினேஷ் சந்திமல்லிடம் வழங்கப்பட் டிருந்தது. அதற்கான உடனடித் தேவை எதுவும் தற்சமயம் காணப்படாததினால் கிரிக்கெட் விமர்சகர்களிடையே பல் வேறு சந்தேகங்களை தோற்றுவித்திருந்தது இந்த நியமனம். இத்தலைவர்கள் இருவரும் டெஸ்ட், ஒருநாள் மற் றும் டுவென்டி 20 தொடருக்கு தலைமை தாங்கும் முதல் சந் தர்ப்பம் பங்களாதேஷ் தொடராகும்.

அத்துடன், அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காயத்திற்கு பின் னர் நீண்ட இடைவெளிக்கு பின் இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார பங்குபற்றிய தொடர். இலங்கை பல இளம் வீரர்களை குழாமில் உள்வாங்கியமை யானது மேலும் கிரிக்கெட் ஆர்வலரிடையே எதிர்பார்ப்பை அதிகரித்தது.

பங்களாதேஷ் அணியை பொறுத்தவரை அவர்களுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது உலகின் முதல் தர சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசனின் உடற்தகுதியின் மையே ஆகும். தவிர, முதல் டெஸ்ட்டில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பாலும் கலந்து கொள்ளவில்லை. இவை அவர்களின் பந்துவீச்சு துடுப்பாட்டம் இரண்டிலும் தாக்கத் தை செலுத்தியிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

டெஸ்ட் போட்டிகளுடன் ஆரம்பித்த இத்தொடரில் முதலாவது போட்டியிலேயே இலங்கைக்கு பங்களாதேஷ் அணியின் அதிர்ச்சி வைத்தியம் காத்திருந்தது. இலங்கை நாணயச் சுழற்சியில் வெற்றி பெற அணித்தலைவர் மத்தியூஸ் முதலில் துடுப்பெடுத்தாட விருப்பம் தெரிவித்தார்.




இதன்படி களம் நுழைந்த இலங்கை அணி குமார் சங்கக்கார, லஹிரு திரிமன்ன, உபதலைவர் தினேஷ் சந்திமல் ஆகியோ-ரின் சதங்களின் உதவியுடன் நான்கு விக்கெட் இழப்பிற்பிற்கு 570 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை அடைந்து தனது இன்னிங்ஸை நிறுத்திகொண்டது.

ஆனாலும் பதிலுக்கு தங்கள் முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி ஆடுகளத்தை சரியான முறையில் பாவித்து ஓட்டங்களை குவிக்க ஆரம்பித்தது. அணித்தலைவர் முஷ்பிகூர் ரஹீமின் இரட்டை சதம், பங்களாதேஷ் அணியின் ஆஸ்தான வீரர் முஹமது அஷ்ரபுலின் 190 ஓட்டங்கள், இளைய வீரர் நசீர் ஹுஸைனின் வேகமான சதம் ஆகியவற்றின் உதவியுடன் 638 ஓட்டங்களை குவித்து இலங்கைக்கு பெரும் நெருக்கடியை கொடுத்தது. இதில் ரஹீமின் இரட்டை சதமானது பங்களாதேஷ் வீரர் ஒருவரால் பெறப்பட முதலாவது இரட்டை சதமாகும்.

68 ஓட்டங்கள் பின்னிலையில் தங்கள் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கையணி அனுபவ வீரர்கள் டில்ஷான், சங்க்கார ஆகியோரின் சத உதவியுடன் 335 ஓட்டங்களை வெறும் நான்கு விக்கட்டுகளை இழந்து பெற்றது. அவ்விரண்டு சதங்களுடன் ஒரே போட்டியில் அதிக சதங்கள் பெறப்பட்ட போட்டியாக காலி டெஸ்ட் மாறியது. போட்டியின் இறுதி நாள் அன்று மீண்டும் துப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி தனது பங்கிற்கும் 70 ஓட்டங்களை பெற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணித்தலைவர் முஷ்பிகூர் ரஹீம் தெரிவு செய்யப்பட்டார். இதில் இலங்கை சார்ப்பாக கிதுருவான் விதானகேயும் பங்களாதேஷ் சார்பாக அனமுல் ஹாக், மொமினுல் ஹாக் ஆகியோர் டெஸ்ட் அறிமுகத்தை பெற்றனர்.

ஆர்.பிரேமதாசா மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பாடக் களமிறங்கிய பங்களாதேஷ் ஹேரத்தின் சுழலில் சிக்கிய பங்களாதேஷ் 240 [illegible] பங்களுக்கு சுருண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை [illegible] சங்கா, சந்திமலின் சத உதவியுடன் 346 ஓட்டங்களை பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸிலும் ஹேரத்தின் மாயஜாலம் ஏழு விக்கெட்டுகளை சரிக்க போட்டியின் வெற்றி இலங்கை பக்கம் திரும்பியது. வெற்றி இலக்கான 160 ஓட்டங்களை இலங்கை மூன்று விக்கெட்டுகளை இழந்து அடைய தொடரை இலங்கை 1:0 என்ற ரீதியில் கைப்பற்றியது. டெஸ்ட் தொடரில் இலங்கை வெற்றி பெற்றாலும் இலங்கையின் எண்ணங்கள் நிறைவேறவில்லை. இத்தொடரில் முற்று முழுதாக பிரகாசித்தவர்கள் இலங்கையின் சிரேஷ்ட வீரர்களே! புதிய வீரர்களான சமிந்த எறங்க, திமுத் கருணாரத்ன, இறுதி போட்டிக்கு அழைக்கப்பட்ட சுரங்க லக்மல் ஆகியோர் தடுமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தொடரை பொறுத்தவரை அஞ்ஜெலோ மத்தியூஸ், தனது பொறுப்புகளை அணியின் சிரேஷ்ட வீரர்களிடம் விட்டுவிட்டார் என்று தான் கூறவேண்டும். டெஸ்ட் தொடரின் தொடர்நாயகன் விருதை உபாதையில் இருந்து மீண்டு வந்த குமார் சங்கக்கார தட்டி கொண்டார்.

2007ஆம் ஆண்டுக்கு பின்னர் தொடர்ச்சியாக எழுச்சி கண்டுவரும் பங்களாதேஷ் அணியினர் ஒருநாள் போட்டிகளின் போது இலங்கையணிக்கு பலத்த சவாலாக விளங்குவர்கள் என்பது எதிர்பார்க்கப்பட்டதே! அதற்கேற்றால் போல் தொடரை அவர்கள் சமன் செய்து இலங்கைக்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்தனர். நடைபெற்ற மூன்று ஒருநாள் போட்டிகளும் மழை மற்றும் போதிய வெளிச்சமின்மையால் பாதிக்கப்பட்டிருந்தது. இதில், இரண்டாவது போட்டி கைவிடப்பட மற்றைய இரு போட்டிகளும் டக்வோர்த்-லூயிஸ் முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




ஒற்றை டுவெண்டி 20 போட்டியிலும் பங்களாதேஷ் அணி சிறப்பாக செயற்பட்ட போதும் 17 ஓட்டங்களால் தோல்வியடைந்து இலங்கையணித்தலைவர் சந்திமலுக்கு முதல் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.


இந்தத் தொடரை முழுவதுமாக எடுத்து நோக்கினால், பங்களாதேஷ் அணியினரின் சிறப்பான பெறுபேறுகளே முதன்மையாகத் தெரிகின்றன.

தொடர்ந்து புதுவரவாக பல துடுப்பாட்ட வீரர்கள் இலங்கை அணிக்குள் நுழையும் போதும், பந்துவீச்சாளர்களின் இடம் காலியாகவே உள்ளது. அந்த இளம் துடுப்பாட்ட வீரர்களும் தகுந்த சமயத்தில் தங்கள் திறமைகளைக் காட்டத் தவறி விடுகின்றனர். முரளி மற்றும் வாஸ் ஆகியோரின் ஓய்விற்கு பிறகு இன்றும் வெற்றிடமாக இருக்கும் அவர்களது இடத்திற்கு புதிய பந்து வீச்சாளர்களை இலங்கைத் தேர்வுக்குழு கண்டறியுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

Sri Lanka Cricket

## ஸ்ரீலங்கா கிரிக்கெட்

# தேர்வுகளும் குழப்பங்களும்





**கனகலிங்கம் கோபிகிருஷ்ணா**

**கி**ரிக்கெட் சபைக் குழப்பங்களுக்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எப்போதுமே பெயர் போனது என்பதோடு, அவர்களை வெல்வதற்கு ஏனைய கிரிக்கெட் சபைகளுக்கு இலகுவாக முடிந்திருப்பதில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் குழப்பங்களுக்கு ஏனைய கிரிக்கெட் சபைகள் போட்டியை வழங்கினால், அதையெல்லாம் விஞ்சிக் கொண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை புதியதொரு குழப்பத்தை மாபெருமளவில் செய்து கொள்ளும்.

ஆனால் அண்மைக் காலத்தில் இலங்கைக் கிரிக்கெட் சபை, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை, நியூசிலாந்துக் கிரிக்கெட் சபை, சில வேளைகளில் இங்கிலாந்து, அவுஸ்ரேலியக் கிரிக்கெட் சபைகளும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குப் போட்டிகளை வழங்கியிருந்தன. இதில் இலங்கைக் கிரிக்கெட் சபை முக்கியமானது.

உலகக் கிண்ணத்தையும், உலக டுவெண்டி 20 தொடரையும் நடாத்தி முடித்த பின்னரும் கூட நட்டத்தில் இயங்குகின்ற சபையாக, டுவெண்டி 20 தொடரொன்றின் (எஸ்.எல்.பி.எல்) மூலமாகப் பணத்தை உழைக்க முடியாத சபையாக, கிரிக்கெட் தேர்வாளர்களின் தெரிவுகளை அமைச்சரொருவர் நிராகரிக்கின்ற இயல்பும், கிரிக்கெட் சபையின் நிர்வாகத் தெரிவுகளில் அரசியல் புகுந்து விளையாடுகின்ற தன்மையும் இலங்கைக் கிரிக்கெட் சபைக்குத் தனித்துவமானவை.

இந்த நிலையிலேயே இலங்கை ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரும், விளையாடும் காலத்தில் அரசியல் பின்புலங்களைப் பயன்படுத்தித் தனது கிரிக்கெட் வாழ்வை நீட்டிக் கொண்டவர் எனக் குற்றம் சாட்டப்படுபவருமான சனத் ஜெயசூரிய இலங்கை அணியின் பிரதம தேர்வாளராக நியமிக்கப்பட்டார்.


அவரது தேர்வுக்குழுவில் நியமிக்கப்பட்ட இன்னொருவரான ஹேமந்த விக்கிரமரத்ன பதவி விலகிக்கொள்ள, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் வீரருமான ஹஷான் திலகரட்ண தேர்வாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

சனத் ஜெயசூரியவின் தேர்வில் ஒரு பக்கமாக அரசியல் காணப்படலாம் என்ற கருத்துக்கள் நிலவிய போதிலும், அவருக்கு ஆதரவான நிலைப்பாடுகளும் காணப்பட்டன. இலங்கையில் தோன்றிய மிகச்சிறந்த வீரர்களில் ஒருவர் என்பதால் கிரிக்கெட்டை முன்னேற்றுவதற்காக அவர் போராடுவார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தாலும், தேர்வாளராக நியமிக்கப்படும் வரை அவர் உள்ளூர்ப் போட்டிகளிலும், டுவெண்டி 20 தொடர்களில் பங்குபற்றி வந்ததால் அவரது நியமனம் பொருத்தமற்றது என அவருக்கு எதிரானவர்களும் கருத்துத் தெரிவித்து வந்தனர். இருதரப்பின் கருத்துக்களிலும் உண்மைகள் உண்டு என்பதை மறுக்க முடியாது.

சனத் ஜெயசூரிய தேர்வாளராக நியமிக்கப்பட்டாலும், அவருக்கான சவால்கள் அதிகமாகவே இருந்தன. புதிய அணித் தலைவரைத் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு, இளைய அணியொன்றைக் கட்டமைக்க வேண்டிய பொறுப்பு, ஒப்பந்தப் பிரச்சினைகள் என ஏராளமான சவால்களை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

புதிய டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் அணித் தலைவராக அஞ்சலோ மத்தியூஸும், டுவெண்டி 20 போட்டிகளின் தலைவராக டினேஷ் சந்திமாலும் நியமிக்கப்பட்டனர். தன்னை ஒரு டெஸ்ட் வீரராக அஞ்சலோ மத்தியூஸ் நிரூபிக்காத போதிலும் , வேறு மாற்று வீரரொருவர் தலைமைப் பதவிக்குப் பொருத்தமாக இல்லாத நிலையில் அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் அணியின் தலைவரானார்.

டெஸ்ட் போட்டிகளில் அஞ்சலோ மத்தியூஸ் அவ்வளவாகப் பந்து வீசுவதில்லை, அவரது பந்துவீச்சு டெஸ்ட் போட்டிகளில் இதுவரை எடுபடவில்லை என்பதால் அவரைத் தனித்த துடுப்பாட்ட வீரராகவே கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதால் டெஸ்ட் அணியில் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவுசெய்யப்பட வேண்டுமா? என்ற கேள்வியுள்ளது.



மத்தியூஸ்

VS

சந்திமல்



| | Mat | Runs | HS | Ave | Mat | Runs | HS | Ave |
|---|---|---|---|---|---|---|---|---|
| Tests | 7 | 583 | 116* | 58.30 | 33 | 1762 | 105* | 40.04 |
| ODIs | 53 | 1367 | 111 | 33.34 | 93 | 1790 | 80* | 33.77 |
| T20Is | 15 | 187 | 56 | 14.38 | 39 | 479 | 58 | 28.17 |

டெஸ்ட் போட்டியின் இன்னிங்ஸ் ஒன்றில் ஒரு விக்கெட்டுக்கு அதிகமாக இதுவரை கைப்பற்றியதுமில்லை, Strike rate எனப்படும் ஒரு விக்கெட்டை வீழ்த்தத் தேவைப்படும் பந்துவீச்சுக்களின் எண்ணிக்கை 144 என்ற ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் காணப்படுகின்றமை ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும் போது அஞ்சலோ மத்தியூஸ் துடுப்பாட்ட வீரராக இன்னமும் பிரகாசிக்க வேண்டிய தேவையுண்டு.

மறுபுறத்தில் டினேஷ் சந்திமாலை டுவெண்டி 20 அணியின் தலைவராக நியமிக்க எடுத்த முடிவு இன்னமும் அதீத குழப்பத்தைத் தரக்கூடியது. ஒரு வருடத்தில் சர்வதேச டுவெண்டி 20 போட்டிகள் 2, 3 இல் தான் இலங்கை அணி பங்கேற்கவுள்ள நிலையில், இளம் அணித்தலைவரான அஞ்சலோ மத்தியூஸால் அந்தப் பணியைச் செய்ய முடியாது என சனத் ஜெயசூரிய தலைமையிலான குழு எவ்வாறு முடிவெடுத்தது என்ற கேள்வி ஒரு புறத்தில் வைக்கப்பட, டினேஷ் சந்திமால் எவ்வாறு அணித் தலைவராக நியமிக்கப்பட முடியும் என்ற கேள்வி மறுபுறத்தில் உண்டு.


அணித்தலைவராக நியமிக்கப்படும் போது டினேஷ் சந்திமால் 14 போட்டிகளில், 12 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய 56 என்ற அதிகபட்ச ஓட்டங்களுடன் 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுள்ளார். இதில் அவர் சராசரியாக 14.83 என்பதையும், Strike rate ஆக 97.26 என்பதையும் கொண்டிருக்கிறார், ஒரேயொரு அரைச்சதத்தை மாத்திரம் கொண்டிருக்கிறார். ஆக, டுவென்டி 20 அணியில் அவரது இடமே கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில், அவரைத் தலைமைப் பதவியில் அமர்த்தி வேடிக்கை பார்த்திருக்கிறது புதிய தெரிவுக்குழு.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, அண்மைக்கால இலங்கையின் நம்பியிருக்கக்கூடிய துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரும் , இலங்கை அணி விக்கெட்டுக்களை இழக்கும் போதெல்லாம் ஆபத்பாண்டவராகக் காப்பாற்றிக் கரை சேர்ப்பவருமான திலான் சமரவீரவின் ஓய்வு அதியுச்சக் குழப்பமாக மாறிப் போனது.

பங்களாதேஷ் தொடருக்காக அறிவிக்கப்பட்ட 23 பேர் கொண்ட குழாமில் திலான் சமரவீர சேர்க்கப்படாத நிலையில், அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார் அல்லது பலம் குறைந்த அணியென்பதால் அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருக்கிறது என எண்ணப்பட்டது. ஆனால் அக்குழாமில் இடம்பெற்றிருந்த மஹேல ஜெயவர்தன காயமடைய, 23 பேர் கொண்ட குழாமில் திலான் சமரவீர சேர்க்கப்பட்டிருந்தார். 15 பேர் கொண்ட குழாம் திரும்ப அறிவிக்கப்பட்ட போது, திலான் சமரவீர அதிலிருந்து நீக்கப்பட, அதில் அதிருப்தி, மனரீதியாகக் காயமடைந்த திலான் சமரவீர தான் ஓய்வுபெறுவதாக அறிவித்திருந்தார்.

15 பேர் கொண்ட குழாமில் அவர் சேர்க்கப்படமாட்டார் என்றால் , சிரேஷ்ட வீரரான திலான் சமரவீர 23 பேர் கொண்ட குழாமில் என்ன காரணத்திற்காக மஹேல ஜெயவர்தனவிற்குப் பதிலாக சேர்க்கப்பட்டார் என்பதுவும், அவ்வாறு 15 பேர் கொண்ட குழாமில் சேர்க்கப்படாமைக்கான போதுமான விளக்கம் சிரேஷ்ட வீரரான திலான் சமரவீரவிற்கு ஏன் வழங்கப்படவில்லை என்பதுவும் தேர்வாளர்களும், கிரிக்கெட் சபையும் வழங்க வேண்டிய விளக்கமாக உள்ளது.

குமார் சங்க்கார, மஹேல ஜெயவர்தனவிற்குப் பிறகு - சில தரவுகளின் படி மஹேல ஜெயவர்தனவை விடச்சிறந்த டெஸ்ட் வீரராகத் திகழ்ந்த வீரரொருவர், கடந்த 3 ஆண்டுகளில் இலங்கை வீரர்களில் எதிரணியின் நாட்டில் மிகச்சிறப்பான திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்திய வீரரொருவர் சரியான தொடர்பாடல் மூலம் விளக்கமளிக்கப்படாது இவ்வாறு ஓய்வு பெறச் செய்யப்பட்டமை மிகவும் வேதனைக்குரியது.




அத்தோடு மிக அண்மையில் உள்ளூர்ப் போட்டிகளில் இது வரை சிறப்பாகப் பிரகாசிக்காத வீரரான றமித் றம்புக்வெல்ல இலங்கையின் டுவென்டி 20 குழாமிற்குத் தெரிவுசெய்யப்பட்டமை அதிக சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. அமைச்சரான ஹெகலிய றம்புக்வெல்லவின் மகனான இவர், பாடசாலை மட்டப் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்ட வீரரென்ற போதிலும், கழக மட்டப் போட்டிகளில் இன்னமும் பிரகாசிக்காத நிலையில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

சிலவேளைகளில் தேர்வாளர்கள் இவ்வாறு தரவுகளைக் கணக்கிடாது, வீரர்களின் திறமைகளைக் கணிப்பிட்டு அணியைத் தெரிவுசெய்வது வழக்கமென்ற போதிலும், பிரதம தேர்வாளர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர், விளையாட்டுத்துறை அமைச்சர் தேர்வில் தாக்கம் செலுத்துபவர், கிரிக்கெட் சபை நிர்வாகிகள் அரசியல் தொடர்புகளைக் கொண்டவர்கள் என்பதெல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் போது சனத் ஜெயசூரியவின் குழு மீது சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை விட வேறு வழியில்லை.

தேர்வாளராகப் பதவியேற்ற இந்தச் சிறிய காலத்தில் இளைய வீரர்களுக்கான வாய்ப்புக்கள், வீரர்களுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்த முனைதல், தேர்வாளர்களை ஒழுங்குபடுத்துதல் போன்று சனத் ஜெயசூரியவின் பல பணிகள் பாராட்டத்தக்கன என்ற போதிலும், இந்தச் சிறிய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் எம் கண் முன்பு இருப்பது சாதாரணமானது என்பதோடு, அவற்றையெல்லாம் தாண்டி, சிறந்த தேர்வாளராக சனத்தை ஏற்றுக் கொள்ள இன்னும் சில காலமெடுக்கும் என்பதுவும் யதார்த்தம்.





# வீரர்கள் போரில் வெற்றியைப் பதிவாக்கிய

# மகாஜனா



ரட்ணம்
றொசிஹறிந்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையில் கடந்த 13 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் 'வீரர்களின் போர்' என வர்ணிக் கப்படும் இரண்டு நாள் இன்னிங்ஸ் போட்டி கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற் றது.

இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய் தது. அதன்படி களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியின் முதல் விக்கெட் விரைவாக வீழ்த்தப்பட்டது. பின்னர் ஜோடி சேர்ந்த வீரர்கள் நிதானமான ஆட்டத்தினை வெளிப்படுத்த இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணியின் முதல் இன்னிங்ஸ் 126 ஓட்டங்களுக்குள் முடிவுக்கு வந்தது.

அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் பிரசாத் 44, கஜந்தன் 18, ரமேஷ்குமார் 14, மயூரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச் சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் ஜெனக்ஷன் 4 விக் கெட்டுக்களையும், சிந்துஜன், கானுஜன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பாடக் களமிறங் கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினர், மகாஜனாக் கல் லூரி பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தனர். இறுதியில் ஸ்கந்த வரோதயக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக றொபேட் ரிஷாத் 22, சுகிர்தன் 10, ரவிகாந்தன் 09 ஓட்டங் களைப் பெற்றனர். பந்துவீச்சில் மகாஜனா வீரர்களான ஜனந்தன் , கஜந்தன் ஆகியோர் முறையே 19 மற்றும் 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.





63 ஓட்டங்கள் முன்னிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மகாஜனாக்கல்லூரி அணியினர் முதல்நாள் ஆட்டம் நிறைவடைகையில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். தொடர்ந்த இரண்டாம் நாள் ஆட்டத்தில் ஸ்கந்த வரோதய பந்துவீச்சாளர் ஜெனக்ஷனின் பந்துவீச்சை சாமளிக்க முடியாமல் மகாஜனா தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்தது. இறுதியில் மகாஜனாக் கல்லூரியின் இரண்டாம் இன்னிங்ஸ் 93 ஓட்டங்களுக்குள் நிறைவடைந்தது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக மயூரன் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஸ்கந்தா வீரர் ஜெனக்ஷன் 32 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.






படங்கள் : பிரியராசா

157 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கு முதல் இன்னிங்ஸைப் போலவே மகாஜனா அணியினரின் பந்துவீச்சு அச்சுறுத்தலாக அமைந்தது. அவ்வணியின் கானுஜன், ஜெனக்ஷன், சயந்தன் ஆகியோர் போட்டியைச் சமனிலையில் முடிக்கும் நோக்குடன் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் அவர்களாலும் நிலைக்க முடியவில்லை. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 13ஆவது வீரர்களின் போரை மகாஜனாக் கல்லூரி 78 ஓட்டங்களால் வெற்றி கொண்டது. பந்துவீச்சில் மகாஜனாக் கல்லூரி சார்பாக ஜெனந்தன், கஜந்தன், ரமேஸ்குமார் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


போட்டியின் ஆட்ட நாயகனாக மகாஜனாக்கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெனந்தன் தெரிவானார். சிறந்த பந்துவீச்சாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஜெனக்ஷனும், சிறந்த களத் தடுப்பாளராக அதே அணியைச்சேர்ந்த றொசானும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த பிரசாத்தும் , சிறந்த சகலதுறை வீரராக அதே அணியைச் சேர்ந்த கஜந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியில் பெற்றுக் கொண்ட வெற்றியின் மூலம் மகாஜனாக் கல்லூரி அணி 'வீரர்களின் போர்' வெற்றி எண்ணிக்கையைச் சமன் செய்துள்ளது. இதுவரை இவ்விரு அணிகளும் தலா மூன்று வெற்றியைப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் கொழும்பு சுகததாசா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அகில இலங்கைப் பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.காவேரி கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3.20 மீற்றர் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.


இவர் அளவெட்டி அருணோதயாக் கல்லாரியின் பழைய மாணவியும் தற்போது கடற்படையணியினருக்காக விளையாடி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.



இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியாக சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் தெரிவுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.அனித்தா 2.90 மீற்றர்தூரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இந்தப் போட்டியில் தொடர்ந்து வரும் சுற்றுக்களிலும் வெற்றி பெறுவதன் மூலம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசியாவின் இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மரதனும் மரணபயமும்



டிக்கோயா டிலரி தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த மரதன் ஓட்டபோட்டி, அண்மையில் இடம்பெற்றபோது முதலிடம் பெற்ற மாணவன் ஓடிவருவதனைப் படத்தில் காணலாம். (படம் : சதீஷ்)



**பன்னீர்செல்வம் தக்சன்**

இவ்வருட முற்பகுதியில் தூர ஓட்டப்போட்டிகளில் பங்கேற்ற சில மாணவர்கள் திடீரென மரணமான சம்பவங்கள் அடுத்தடுத்து இடம் பெற்றன. இவ்விடயம் குறித்து அதிக கவனமெடுத்த ஜனாதிபதி, விளையாட்டு மருத்துவப்பிரிவுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் 15 வயதுக் குக் குறைவான மாணவர்கள் மரதன் போட்டிகளிலோ அல்லது கிராமங்களினூடாக ஓடும் போட்டிகளிலோ ஓடுவது தடை செய்யப்பட் டுள்ளதாக விளையாட்டு மருத்துவப்பிரிவுப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வயது மட்டத்தினரையும் ஈடுபடுத்தக்கூடியதான ஓட்டத்தூ ரம் குறித்தும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 11 வயதான மாணவர்களை 5 கிலோமீற்றர் தூரம் வரையான ஓட்டப்போட்டியில் ஈடுபடுத்த முடியும். 9 வயது மாணவர்கள் 3 கிலோமீற்றரை விட தூரப்போட் டிகளில் ஈடுபடுத்த முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1500, 3000, 5000 மரதனோட்டம், சைக்கிளோட்டப் போட்டிகள் என்பவற்றில் ஈடுபடும் மாணவர்கள் போட்டிக்கு முன் கட்டாயம் மருத் துவப் பரிசோதனைக்குட்படுத்தி தகுதிச்சான்றிதழ் பெறவேண்டும். விளையாட்டுக்களில் ஈடுபடுகையில் திடீர் நோய்களினால் மாணவர் கள் மரணமடைவதைத் தடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து பாடசாலை அதிபர்கள் விளையாட்டுக்கழகங்கள் என் பவற்றிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களைக் பின்பற்றாத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டாக்டர் அர்ஜுன டி சில்வா கூறினார்.

இந்த வருடம் முதல், சகல மாணவர்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதனால், உரிய பயிற்சிகள் இன்றி மாணவர்கள் ஓட்ட நிகழ்வில் கலந்துகொள்வதாலும், வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் போட்டிகளில் பங்குபற் றுவதனாலும் பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாக நேரிடும். ஆகவே பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் உடல் நிலை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். ஒவ்வாமைகள் குறித்து உரிய முறையில் பாடசாலை சமூகத்துக்கு அறியத்தந்து போட்டிகளில் பங்குபற்றாமல் விடுவதால் விபரீதங்களை முற்கூட் டியே தவிர்க்க முடியும்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிக- ளிலும் மாணவர்கள் பொதுவாக பாடசாலைகளின் இல்ல மெய்வல் லுநர் போட்டி நடைபெறும் காலங்களில் மட்டுமே மைதானங் களுக்கு அதிகளவில் சமூகமளிப்பது வழமை. குறுகிய காலப் பகுதிகளில் பயிற்சிகளை முடித்து போட்டி நிகழ்வுகளில் பங்குபற் றுவதன் மூலம் அவர்களால் உரிய முறையில் தங்களைத் போட் டிகளுக்காக தயார்ப்படுத்திக் கொள்ள முடியாது போகும்.

மைதான நிகழ்வுகளில் சிறந்த வீரர்களை இல்லத் தலைவர்கள் தேர்வு செய்து அனுப்புவார்கள். ஆனால், மரதன் போட்டிகளில் அவ் வாறில்லை. அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கூறுவார்கள். சில பாடசாலைகளில் வற்புறுத்தி போட்டிகளில் ஈடுபடுத்தும் நிலைமையும் காணப்படுவதுண்டு. உடற்கல்வியை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களையும் கட்டாயம் மரதன் போட் டிகளில் பங்குபற்றுமாறு அறிவுறுத்துவார்கள். இது ஆரோக் கியமான விடயமல்ல.

எனவே, போட்டிகளுக்கு முன்னர் மாணவர்களை மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்துவது கட்டாயம். இது குறித்து இனி வருங்காலங்களில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அதிக கவனம் எடுக்கவேண்டும். அத்துடன், மரதன் ஓட்டப்போட் டிகள் நடைபெறும் காலங்களில் முதலுதவிக்காக பிரதேச வைத் தியசாலையுடன் தொடர்புகொண்டு அம்புலன்ஸை வரவழைப்பது சிறந்த முன்னேற்பாடாகும். இதுகுறித்து ஒவ்வொரு பாடசாலை நிர் வாகங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் அண்மையில் இடம்பெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் 31 வீரர்கள் பங்குபற்றினர். களுவாஞ்சிக்குடியில் இருந்து பழுகாமம் வரை போட்டி இடம்பெற்றது. (படம் : ரவீ)

# விளையாட்டில் அரசியலின் தலையீடு கவலைக்குரியது

## அரவிந்த டி சில்வா

'Red Bull பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட்' தொடரின் அரையிறுதி போட்டிகளில் இலங்கையின் முன்னாள் துடுப்பாட்ட நட்சத்திரம் அரவிந்த டி சில்வா கலந்து கொண்டார். அங்கு அவர் 'கேடயம்' சஞ்சிகைக்கு அளித்த விசேட செவ்வி

**கே : பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட்டினை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப : இது மிகவும் முக்கியமானது. இலங்கையினை பொறுத்தவரை சிறந்த இளம் கிரிக்கெட் வீரர்கள் பலர் தங்களது கல்விக்காக கிரிக்கெட்டினை தியாகம் செய்து உள்ளனர். இவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுத்தல் மிகச்சிறந்த ஒரு விடயமாகும். பல்கலைகழகங்களே ஒரு நாட்டின் எதிர்காலமாகும். இவ்வாறான இடங்களில் கிரிக்கெட்டினை ஊக்குவிப்பது முக்கியமாகும்.

**கே : டுவெண்டி 20 போட்டிகளை பற்றி உங்கள் கருத்து?**

ப : டுவெண்டி 20 போட்டிகள் மிகவும் ஜனரஞ்சகமான போட்டிகள். ரசிகர்களை கிரிக்கெட்டின் பக்கம் ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வகையான போட்டிகளை வளர்ப்பதன் மூலம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளை மக்களிடையே கொண்டு செல்லலாம் எனக்கருதுகின்றேன். எதிர்கால கிரிக்கெட்டிற்கு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகள் முக்கியமானவையாகும். அவை பாதிப்படையாத வகையில் டுவெண்டி 20 போட்டிகளை கையாளுதல் முக்கியமாகும்.

**கே : இத்தகைய பல்கலைக்கழக போட்டிகளில் பங்குபற்றி திறமைகளை வெளிபடுத்தும் வீரர்களுக்கு இலங்கை அணியில் வாய்ப்புக்கள் கிடைக்குமா? நீங்கள் தகுதியானவர்களை பரிந்துரை செய்வீர்களா?**

ப : ஒரு போட்டியில் பிரகாசித்ததும் இலங்கை தேசிய அணியில் இடம் கிடைத்துவிடும் அல்லது தேர்வாளர்கள் ஒரு போட்டியில் பிரகாசித்தவர்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள் என்பது தவறானது. தொடர்ந்து திறமையை குறித்த சில போட்டிகளிலாவது வெளிப்படுத்தும் போதுதான், தற்போதைய நிலையில் இளைய வீரர்கள் அடுத்தகட்டத்துக்கு செல்ல முடியும். காரணம், இன்றைய நிலையில் போட்டி தன்மை அதிமாகவே இருக்கிறது. நிச்சயம், திறமையானவர்களை நானும், இந்த போட்டிகளை கண்காணிப்பவர்களும் பரிந்துரை செய்வோம்.

(இந்த செவ்வி காணலின் போது, இலங்கை பல்கலைக்கழக அணி இந்திய பல்கலைக்கழக அணியிடம் அரையிறுதி போட்டியில் இறுதிநேரத்தில் அதிரடியாக ஆடியும் தோல்வி அடைந்திருந்தது. எனவே, அதனை அடிப்படையாக்கொண்டு அடுத்த கேள்வி கேட்கப்பட்டது.)

**கே : இந்த போட்டியில் இலங்கை வீரர்கள் தோல்வி அடைந்து இருக்கிறார்கள். இதை பார்க்கின்ற போது தங்களுக்கு, தங்களுடைய காலத்தில் விளையாடிய போட்டிகள் நினைவுக்கு வருகிறதா? அல்லது ஆர். பிரமேதாஸ மைதானத்தில் விளையாடிய போட்டிகளில் ஏதும் சுவாரசியமான அனுபவம் உள்ளதா?**

ப : (சற்றே சிந்தித்தவாறு) இந்த போட்டியை என்னால் முழுமையாக பார்க்க முடியவில்லை, இறுதி சில ஓவர்களை மட்டுமே பார்த்திருந்தேன். நான் இலங்கை அணிக்காக விளையாடிய ஆரம்ப காலங்களில் வெற்றிகள் தேவைப்பட்ட இடத்தில் இவ்வாறான ஆட்டத்தை நாமும் வெளிப்படுத்தி இருக்கிறோம். இந்த மைதானத்தை பொறுத்தவரை, எனக்கும் அர்ஜுனவுக்கும் நிறையவே அனுபவங்கள், சுவாரசியங்கள் இருக்கிறது. (புன்னகைத்தபடி) அவற்றை பகிர்ந்து கொள்ள தற்போது போதுமான நேரமில்லை.

**கே : நீங்கள் டுவெண்டி 20 போட்டிகளில் பங்குபற்றாமை வருத்தம் அளிக்கின்றதா?**

ப : ஆம், ஆனாலும் ஒருநாள் போட்டிகள் அறிமுகமாகும் போது பல டெஸ்ட் கிரிக்கெட் நட்சத்திரங்கள் அதை விளையாட முடியாமல் போனது. இன்று எம்மை போன்ற வீரர்கள் டுவெண்டி 20 போட்டிகளை விளையாட முடியாதுள்ளது. ஆனாலும் முடிந்தவரை போட்டிகளை ரசித்து, வளர்ந்து வரும் இளைய வீரர்களுக்கு என்னால் முடிந்த ஊக்கத்தையும் உதவிகளையும் வழங்க தயாராக உள்ளேன்.


**கே : இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளில், குறிப்பாக சென்னையில் நடைபெறும் போட்டிகளில் பங்குபெற தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசியலின் ஆதிக்கம் கிரிக்கெட்டில் மேலோங்குகின்றதா?**

ப : ஆம்! அரசியல் விளையாட்டில் கலந்துகொண்டு இருப்பதாகவே எனக்கு தென்படுகிறது. குறிப்பிட்ட இலங்கை வீரர்கள் பங்குபெற்றுவதாக அறிவித்து உள்ளனர். அவர்களது சொந்த முடிவாக அது அமைந்திருக்கிறது. அதைப்பற்றி நான் கருத்து தெரிவிக்க முடியாது. தெரிவிக்கவும் கூடாது. என்னை பொறுத்தவரை அரசியலானது கிரிக்கெட்டில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். விளையாட்டுகள் என்பது மனிதரை ஒன்றிணைக்க கூடிய ஒரு விடயமாகும். இதில் அரசியலின் தலையீடு என்பது கவலைக்குரிய விடயமாகும்.


**கே : 1996 ஆம் ஆண்டிற்கு பின், கிரிக்கெட் உலகக் கிண்ணங்கள் எட்டாக்கனியாகவே உள்ளது, அரையிறுதி போட்டிகள் இறுதி போட்டிகள் அனைத்திலும் இலங்கை தோல்வி அடைத்துள்ளது. இதற்கான முக்கியமான காரணமாக நீங்கள் கருதக்கூடியது?**

ப : (புன்னகையுடன்) இதுவரை கேட்கபட்ட கேள்விகளிலேயே, மிகவும் சிக்கலான பதில் கூறமுடியாத கேள்வி இதுதான்.

என்று கூறி விடைபெற்றார்.



# 107 வது 'வடக்கின் போர்' சமனிலையில் நிறைவு




கனகநாயகம்
வரோதயன்










யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு டையிலான 107ஆவது 'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாட்களைக் கொண்ட இன்னிங்ஸ் கிரிக்கட் போட்டி கடந்த மார்ச் 14, 15, 16ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணியினர் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தனர். அதன்படி துடுப்பாடக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. அவ்வணி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை அவர்களின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 58 ஓட்டங்களைப் பெற்று சென். ஜோன்ஸ் தடுமாறியது. பின்னர் ஐந் தாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அணித்தலைவர் அமிர்தயன் மற்றும் சயன் ஆகியோர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண் ணிக்கையை உயர்த்தினர்.

இந்த ஜோடி 87 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தவேளை பிரிக்கப் பட்டது. சயன் 114 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள் அடங்களாக 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆட்டமிழந்தார். மறுமுனையில் பெறுமையாக ஆடிய அணித்தலைவர் அரைச்சதத்தைக் கடந்தார். இவர் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 142 பந்துகளை எதிர்கொண்டு 62 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய துடுப்பாட்ட வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்ட மிழக்க சென். ஜோன்ஸ் கல்லூரியின் முதல் இன்னிங்ஸ் 183 ஓட்டங்களுக்கு நிறைவுக்கு வந்தது. பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக மூன்று விக்கெட்டுக்களையும், டார்வின், அலன்ராஜ், நிரூபன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் லோகதீஸ்வரின் சுழலுக்கு அகப்பட்டு விரைவாக விக்கெட்டுக் களைப் பறிகொடுத்தனர். முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வரும்போது மத்திய கல்லூரி அணியினர் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்களைப் பெற் றிருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்தபோது மத்திய கல்லூரி அணியின் முழுப்பாரமும் ஐந்தாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சௌமி தரன் மற்றும் யூலியஸ் கலிஸ்ரன் ஆகிய இருவரின் தலையிலும் இறங்கியது. இதனால் நிதானமாக பொறுப்பான ஆட்டத்தை இவர்கள் இருவரும் வெளிப் படுத்தினர். இந்த ஜோடி 40 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை லோகதீஸ்வரின் சுழலில் சௌமிதரன் வெளியேறினார். தொடர்ந்தும் விக்கெட்டுக்கள் சரிய எட்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அலன் டிலான் மற்றும் கபிலன் ஆகியோர் மீண்டுமொரு பொறுப்பாட்டத்தை வெளிப்படுத் தினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை யாழ். மத்திய கல்லூரி அணியினர் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டத்தில் 90 ஓவர்கள் வீசப்படவேண்டிய நிலையில் மூன்று தடவை மழை குறுக்கிட்டதால் 59 ஓவர்களே வீசப்பட்டன. இதனால் வெற்றி தோல்வியற்ற முடிவை நோக்கியதாக மூன்றாம் நாள் ஆட்டமும் தொடர்ந்தது.

நிதானமாக ஆடிய மத்திய கல்லூரியின் எட்டாவது ஜோடி பிரிக்கப்பட, மூன்றாம் நாளின் ஆரம்பத்தில் யாழ். மத்திய கல்லூரியின் முதல் இன்னிங்ஸ் 146 ஓட்டங் களுக்கு நிறைவுக்கு வந்தது. அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் சௌமிதரன் 28, கலின்ரன் 23, அலன்ராஜ் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் அணி சார்பாக லோகதீஸ்வர் 51 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து 37 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய சென். ஜோன்ஸ் அணியினர் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட் டங்களைப் பெற்றிருந்தவேளை தமது இன்னிங்ஸை நிறைவுக்குக் கொண்டு வந்தனர்.

அவ்வணி சார்பாக துடுப்பாட்டத்தில் துவாரகசீலன் 28, அமிர் தயன் 27, பிரிசங்கர் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்தியின் நிரூபன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற் றினார்.

181 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மத்திய கல்லூரியின் முதல் இரண்டு விக்கெட்டுக்களும் விரைவாக வீழ்த்தப்பட்டது. இதனால் போட்டியில் வெற்றிபெறும் முனைப்புடன் சென். ஜோன்ஸ் அணியினர் ஆக்ரோசமாக விளையாடினர். இருந்தும் மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த டர்வின் மற்றும் நிரோஜ் ஆகியோர் போட்டியை சமனிலையில் நிறைவு செய்யும் நோக்குடன் மந்த கதியில் நிதானமாக ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாவது இன் னிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங் களைப் பெற்றவேளை போட்டி நிறைவுக்கு வந்தது. துடுப்பாட்டத் தில் மத்திய கல்லூரி சார்பாக டர்வின் 33 ஓட்டங்களையும், நிரோஜ் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸின் லோகதீஸ்வர் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதன் மூலம் 'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படுகின்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இப்போட் டியின் ஆட்டநாயகனாகவும், போட்டியின் சிறந்த பந்துவீச் சாளராகவும் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த லோகதீஸ் வரும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த அலன் டிலானும், சிறந்த சகலதுறை வீரராக அதே அணியைச் சேர்ந்த அலன்ராஜ் உம், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். ஜோன்ஸ் கல்லூரியின் அணித்தலைவர் அமிர்தயனும் தெரிவு செய்யப்பட்டனர்.


### ஒருநாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி

இவ்விரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டி கடந்த மார்ச் 23ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் அமிர்தயன் முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்தார். அதற்கிணங்க களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 46.5 ஓவர் களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. உதிரிகளாக 29 ஓட்டங்கள் பெறப்பட்டதுடன், அணித் தலைவர் டர்வின் 39, நிரோஜ் 38, அலன் டிலான் 37 ஓட்டங் களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் அணி சார்பாக பிரியசங்கர் 17 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக்களையும், லோகதீஸ்வரன், கானாமிர்தன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


209 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக் குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் முதல் மூன்று விக்கெட்டுக்களும் 13 ஓட்டங்களுக்குள் சரிந்தது. இம்மூன்று விக்கெட்டுக்களையும் யாழ். மத்தியின் பந் துவீச்சாளர் ஹரிகரன் கைப்பற்றினார். எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வெற்றி யினை நோக்கி சென். ஜோன்ஸ் அணி முன்னேறியது. எனினும் அவ்வணியின் போராட்டம், யாழ். மத்தியின் சிறப்பான வேகப்பந் துவீச்சில் முடிவுக்கு வந்தது.

இறுதியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 பெற்று தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் அமிர்தயன் 38 ஓட்டங்களையும், கவாஸ்வர் 45, சஜன் 38, துவாரகசீலன் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஹரிகரன் 8.2 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த 4 விக் கெட்டுக்களையும், சௌமிதரன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த் தினர். போட்டியின் நாயகனாக யாழ். மத்திய வீரர் ஹரிகரன் தெரிவானார்.










**பகுதி நேர செய்தியாளராக தொழில் புரிய விருப்பமா?**

மாதம் ஒரு முறை தமிழில் வெளிவரும் கேடயம் விளையாட்டு சஞ்சிகைக்கு நாடளாவிய ரீதியில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள் பற்றிய தொகுப்பை எழுதி அனுப்ப முடியும்.
உங்கள் பிரதேச விளையாட்டு நிகழ்வுகளையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.
பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிலைய மாணவர்களும் விரும்பப்படுகிறார்கள்.

சுயவிபரக் கோவையை அனுப்ப வேண்டிய முகவரி :
"கேடயம் சஞ்சிகை". வட்டுவினி வீதி. இணுவில் மேற்கு. சுன்னாகம்.
மின்னஞ்சல் : vsheron@gmail.com

# தேசிய மட்டத்தில் தங்கம் வென்றது

# மானிப்பாய் இந்துக் கல்லூரி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் கொழும்பு தலவாக்கல ஒய்ஏசியன் விளையாட்டுக்கழகத்தால் பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டப்போட்டி, அணிக்கு ஐந்து பேரைக் கொண்ட ஆட்டமாக கொழும்பில் நடைபெற்றது. இதில் முதற்சுற்று ஆட்டத்தில் கொழும்பு கேற்வே சர்வதேச கல்லூரி அணியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதியது. இதில் சிறப்பான முறையில் செயற்பட்ட மானிப்பாய் இந்து அணி 2 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியில் தீபராஜ் இரண்டு கோல்களையும் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் கொழும்பு சென். தோமஸ் கலப்பு அணியை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் கொண்டது.

இப்போட்டியில் ஆரம்பம் முதலே மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியது. மானிப்பாய் இந்து அணி வீரர்களான ஜீவராஜ் இரண்டு, அகிலன் - கோகுலன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களை அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4 : 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவானது.

அரையிறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியும், கொழும்பு றோயல் இன்டிஸ்ரியூட் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே சமபலத்துடன் மோதியதால் ஆட்டநேர முடிவு வரை கோல்கள் எதனையும் பெற்றிருக்கவில்லை. இதனைத்தொடர்ந்து வழங்கப்பட்ட தண்ட உதையின் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப்போட்டியில் கொழும்பு வெஸ்லி கல்லூரி அணியுடன் மோதிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஜீவராஜ், கைலர் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இரண்டு கோல்களைப் பெற்றது. போட்டி நிறைவடைவதற்கு ஒரு நிமிடம் இருக்கும் போது வெஸ்லி அணியினர் கோல் ஒன்றினைப் பெற, இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 : 1 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தினை சுவீகரித்தது.

இந்த வெற்றி மூலம், 2013ஆம் வருடத்தில் வடமாகாணம் சார்பாக முதல் தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக்கொடுத்த அணி என்ற பெருமையை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெறுகின்றது. இதேவேளை வடமாகாணத்தில் இருந்து கலந்து கொண்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி அரையிறுதி வரை முன்னேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வட மாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே பரந்தன் சந்தியில் இருந்து விசுவமடு வரை நடை பெற்ற அரை மரதன் ஓட்டப்போட்டிகள்

ஆண்களுக்கான போட்டியில் 1ம் இடத்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ரி.அன்ரன் டெல்மனும், 2ம் இடத்தினை வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பி.சுகந்தனும், 3ம் இடத்தினை வவுனியா வடக்கு சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஆர்.சாந்தனும் பெற்றுக் கொண்டனர்.







பெண்களுக்கான போட்டியில் 1ம். இடத்தினை சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி. தர்சிகாவும், 2ம் இடத்தை புளியங்குளம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.றஜிதாவும், 3ம் இடத்தை நெடுங்கேணி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம் டிலக்ஷனாவும் பெற்றுக் கொண்டனர்.

# உங்களுடன்..

வணக்கம் வாசகர்களே!

ஆரம்பத்திலேயே வாசகர்களிடம் 'மன்னிப்பு'க் கேட்டுவிடுவது சாலச் சிறந்தது. கேடயம் விளையாட்டுச் சஞ்சிகையின் வெளியீடு இடையிலே தடைப்பட்டதற்கு முதற்கண் சிரம் தாழ்ந்து வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம். விளையாட்டு ரசிகர்களிடம், குறிப்பாக மாணவர்களிடம் நல்வரவைப் பெற்ற கேடயம் சஞ்சிகையின் வெளியீட்டை இடையில் நிறுத்துவது எங்கள் நோக்கமல்ல. சில பொருளாதார பின்னடைவுகளை சரி செய்து கொண்டு மீண்டும் உங்களிடம் வந்து சேர்ந்திருக்கின்றோம். இம்முறை இன்னும் வீச்சம் அதிகமாக...

இந்த குறுகிய காலப்பகுதியில் எம்மை ஸ்திரப்படுத்தியது மட்டுமல்லாமல் எங்கள் விற்பனையையும் வடக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளான மலையகம், கிழக்கு மாகாணம், கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கு கொண்டு செல்ல முடிந்திருக்கின்றது.

இலங்கை 'தமிழ்' அச்சு ஊடகத்துறையில் விளையாட்டுச் சஞ்சிகைக்கென இருந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு 'கேடயம்' உதயமாகியது. எமது வெளியீடு தடைப்பட்ட இந்தக் காலப்பகுதியில் இவ்வெற்றிடத்தை நிரப்ப எவருமே முன்வந்திருக்கவில்லை என்பது எங்களுக்கு இன்னும் சாதகமாகப் போய்விட்டது. கேடயத்தின் வளர்ச்சிப் படியில் எம்மை அன்போடு ஊக்குவித்தவர்களின் 'அடுத்த இதழ் எப்போது?' என்ற தொடர்ச்சியான நச்சரித்தல்கள் எம்மை சோர்ந்து போக விடாமல் உற்சாகமூட்டின.

மாணவர்களின் விளையாட்டுத்துறைச் சாதனைகளை கேடயம் மூலம் வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு உற்சாகமூட்டுவதுடன் அவர்களின் சாதனைகளை நாடறியச்செய்வதே எமது வெளியீட்டின் முக்கிய நோக்கம். அதனைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றோம். எங்கள் பயணத்திற்கு பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு மிக இன்றியமையாதது ஆகும். பல பாடசாலை அதிபர்களும், விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகளும் எமக்கு என்றுமே ஆதரவாகத் தான் நிற்கின்றார்கள். எனினும், தொடர்ச்சியாக எங்களுடன் இணைந்து தங்கள் பாடசாலை மாணவர்களின் சாதனைகளை எமக்கு வழங்குவதில் பலர் தவறி விடுகிறார்கள்.

எனவே, இதற்கென்று தனியாக ஒரு ஆசிரியரை நியமித்து (விளையாட்டுத்துறை ஆசிரியர் பொருத்தமானவர்) எங்களுக்கு தகவல்களை வழங்குவது பேருதவியாக இருக்கும்.

அத்துடன், மாணவர்களிடம் இந்த சஞ்சிகையைக் கொண்டு சேர்ப்பதற்கும் அதிபர்கள் உதவ வேண்டும். காரணம், மாணவர்களிடம் சஞ்சிகையை அறிமுகப்படுத்தாமல் அலுவலகத்துடனேயே எங்களை திருப்பியனுப்பிய அதிபர்களும் சிலர் உள்ளனர்.

பாடசாலைச் சமூகங்களில் இருந்து எமது கோரிக்கைகளுக்கான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். கேடயத்தின் பயணம் வெற்றிப்பாதையில் அமைய நீங்கள் முக்கியமானவர்கள்.

இச்சஞ்சிகை நாடு முழுவதும் தமிழர் பிரதேசங்களில் விற்கப்படுவதால் எமது சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையை விஸ்தரிக்க வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கான விளம்பரங்கள் இவ்விதழிலேயே உண்டு. பொருத்தமானவர்கள் விண்ணப்பிப்பதன் மூலம் எமது குழுமத்துடன் இணைந்து 'கேடயம்' இன் வளர்ச்சி படியில் பங்கெடுக்கலாம். கடந்த இதழ்களுக்கு வழங்கிய ஆதரவை இந்த இதழுக்கும் இனி வரவிருக்கின்ற இதழ்களுக்கும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது பயணத்தை முன்னெடுக்கின்றோம்.

ஆசிரியர்.

## பரிசுப்போட்டி 03

**கேள்வி : 2013ஆம் வருட ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?**

விடை : ........................................

பெயர் : ........................................

தொ.பேசி இல : ........................................

பாடசாலை / கம்பனி : ........................................

முகவரி : ........................................

........................................

ஒப்பம் : ........................................

இங்கு வெட்டப்படும் கூப்பன்களுடன் வரும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி 25.04.2013.

சரியான விடைகளை எழுதியனுப்பும் ஐந்து அதிஷ்டசாலி வாசகர்களுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் தொப்பி (Cap) பரிசாக வழங்கப்படும்.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**சாந்தினி பதிப்பகம், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம்**

பரிசுப்போட்டி 02, வெற்றி பெற்ற அதிஷ்டசாலி வாசகர்கள்
01. ம.லிந்துசா - இணுவில் மத்திய கல்லூரி
02. ஜெ.ஜெகப்பிரவீன் - யாழ். இந்துக் கல்லூரி
03. சி.நிகேதன் - பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி


## விற்பனை - சந்தைப்படுத்தல்
## பிரதிநிதிகள் தேவை

யாழ் குடாநாட்டிலிருந்து மாதம் ஒருமுறை வெளிவருகின்ற 'கேடயம்' விளையாட்டுச் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படவுள்ளது. இதற்கென வடக்கு, கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ, சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை கீழுள்ள எமது முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறீர்கள்.

*கேடயம் சஞ்சிகை,*
*வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம்.*
*மின்னஞ்சல் :* vsheron@gmail.com



வெற்றிக் கேடயம் மாத இதழ்

சாந்தினி பதிப்பக வெளியீடு
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
தொ.பேசி : (94) 21 4909629
மொபைல் : (94) 771777434
மின்னஞ்சல் : vsheron@gmail.com

| | |
|---|---|
| நிர்வாக இயக்குனர் | : திரு.இ.வை.கனகநாயகம் |
| ஆசிரியர் | : க.வரோதயன் |
| உதவி ஆசிரியர்கள் | : எஸ்.அனுதினன் |
| | க.யசோதரன் |
| பக்க வடிவமைப்பு | : க்ரிஷ் வருண் |
| கணனி தட்டச்சு | : எம்.வாகினி |
| அலுவலக உதவி | : செ.றொஷானி (கொழும்பு) |
| | அ.மேனகா (யாழ்ப்பாணம்) |
| | Kss.ராஜ் (வவுனியா) |
| | எஸ்.சிவசக்தி (ஹற்றன்) |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம் | : ப.தக்சன் |
| | செ.காண்டீபன் |

அச்சமைப்பு : ஜெயஸ்ரீ பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்



இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.
கட்டுரைக்கான முழு உரிமையும் கட்டுரையாளர்களையே சாரும்.

## வலிகாமம் வலய கரப்பந்தாட்டம்

# மகாஜனா, அருணோதயா ஆதிக்கம்



வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கடந்த 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன.

இதில், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வலிகாமம் கல்வி வலய சம்பினாக தெரிவு செய்யப்பட்டது.

இப்பிரிவு ஆட்டத்தின் இறுதிப்போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாக காணப்பட்ட போதிலும் மகாஜனாக் கல்லூரி தனது கடந்த கால கள அனுபவங்களின் அடிப்படையில் நிலமை உணந்து விளையாடி வெற்றியை தனதாக்கிக் கொண்டது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை முறையே 25 : 15, 25 : 16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வலய சம்பினாக தெரிவானது. இச்சுற்றில் மூன்றாமிடத்தினை அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

இதேவேளை, 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாம் மூன்றாமிடங்கள் முறையே சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணிகள் பெற்றுக்கொண்டன.

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி முதலிடத்தையும், இரண்டாம், மூன்றாமிடங்கள் முறையே அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம் ஆகியன பெற்றுக்கொண்டன.

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முதலிடத்தையும், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே வயாவிளான் மத்திய மகா வித்தியாலயமும், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாம் மூன்றாமிடங்கள் முறையே இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், சண்டிலிப்பாய் சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன. 19 வயதுப்பிரிவு பெண்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதலிடத்தையும் இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.


# வேலன் எக்ஸ்பிரஸ்

## VELAN EXPRESS

யாழ்ப்பாணம் ⇄ கொழும்பு ⇄ பருத்தித்துறை

**தினமும் சேவையில்**

- *A.C, Non A.C buses*
- *Adjestable seats*
- *Vedio Coach*




ஆசனப்பதிவுகளுக்கு :

0777563276 (கொழும்பு)

0212263770 (பருத்தித்துறை)



15 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணி



17 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணி



19 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணி



19 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணி

வலமிருந்து இடமாக : திருமதி பா.குகநேசன் (வலைப்பந்தாட்டப் பொறுப்பாசிரியை), திருமதி றோ.பாலஸ்கந்தன் (பிரதி அதிபர்), அணித்தலைவி, திருமதி மி.விமலநாதன் (அதிபர்), திருமதி ல.லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி ந.சிவசுப்ரமணியம் (விளை. பொறுப்பாசிரியை)

# தொடர் வெற்றிகளைப் பதிவாக்கும் யாழ். இந்து மகளிர்

யாழ்ப்பாண கல்வி வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மூன்று பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. யாழ்ப்பாண வலய மட்ட வலைப்பாந்தாட்டப் போட்டிகள் கடந்த மாதம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன.

இதில் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதிப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 36 : 32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தைக் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. 17 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 37 : 10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

15 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், பாஷையூர் சென்.அன்ரனீஸ் மகளிர் அணியும் மோதின. இப்போட்டியிலும் யாழ். இந்து மகளிர் அணியினர் 14 : 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகினர். மூன்றாமிடத்தை வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை அணி பிடித்துக்கொண்டது.

அத்துடன், 19 வயதுப்பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியிலும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது. கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணிகளின் 15 வயதுப்பிரிவின் தலைவியாக செல்வி ரி.கேஜிகாவும், 17 வயதுப்பிரிவின் தலைவியாக செல்வி வி. சுலோஜினியும், 19 வயதுப்பிரிவின் தலைவியாக செல்வி ஆர்.தர்ஷிகாவும், 19 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியின் தலைவியாக செல்வி ரி.ஜான்சியும் திகழ்கின்றனர்.

இதேவேளை, வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலையைச் சந்தித்த இராமநாதன் கல்லூரி கடும்சவாலை எதிர்கொண்டது. இறுதியில் 33 : 24 என்ற புள்ளிகள் அடிப்படையில் இராமநாதன் கல்லூரி வெற்றி பெற்றது. இந்த தொடரில் மூன்றாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

Red Bull CAMPUS CRICKET WORLD FINALS

## சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான

# கிரிக்கெட் போட்டி

## 2013 – ஓர் பார்வை



ஜ.அனுதினன்


Red Bull சர்வதேச டுவெண்டி 20 போட்டிகள் இம்முறையும் இரண்டாவது தடவையாக இலங்கையில் வெற்றிகரமாக இடம் பெற்று முடிவுக்கு வந்துள்ளது. கடந்தமுறை போல இந்திய நாட்டை பிரதிநிதித்துவபடுத்திய பல்கலைக்கழக அணியொன்றே இம்முறையும் சாம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. இவ்வருட போட்டிகளில் பங்கெடுத்த கிரிக்கெட் அணிகள் அனைத்தும் உலகளாவிய ரீதியில் நூற்றுக்கும் மேற் பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன. அந்த அணிகளுக்கான மாபெரும் இறுதிப்போட்டியாக இலங் கையில் இடம்பெற்ற போட்டிகள் இடம்பெற்றிருந்தது. இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பெரிய பிரித்தானியா, ஆஸ் திரேலியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழகங்கள் பங்கு பெற்றிருந்தன.

இம்முறை இலங்கையை பிரதிநிதித்துவபடுத்தி மொறட்டுவ பல் கலைக்கழக அணி பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் இருந் தும் இந்த அணி தெரிவு செய்யபட்டிருந்தது. இதில், குறிப்பிடத் தக்க விடயம் என்னவெனில், கடந்தமுறை Red Bull சர்வதேச போட்டிகளுக்கு தகுதிபெற்ற கொழும்பு பல்கலைக்கழக அணி முதலாம் சுற்றிலேயே வெளியேறிவிட, யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி அரையிறுதிவரை முன்னேறி தோல்வியை தழுவி யிருந்தது. தேசியமட்ட போட்டிகள் இடம்பெற்ற போது, பல்வேறு ஆர்வலர்களின் எதிர்பார்ப்புக்களையும் மீறி, இறுதிவரை யாழ்ப் பாண பல்கலைக்கழக அணி போராடியிருந்தமை குறிப்பிடத்தக் கது. இருந்தபோதிலும், தென் மாகாண பல்கலைக்கழக அணிகள் போல, பயிற்சிகளையோ, ஆடுகள வளங்களை முழுமையாக கொண்டிராத நிலையில், போட்டிகளில் தோல்வியுற்று வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டிருந்தது. அடுத்த வருடம் நிச்சயமாக, ஒரு போட்டித்தன்மை மிக்க யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்பார் க்கலாம்.

இவ்வருட போட்டிகளில் ஆறு அணிகளும் இரண்டு குழுக்களாக பிரிக்கபட்டு, ஒவ்வொரு அணிக்கும் எதிரணியுடன் இருமுறை போட்டிகளில் பங்குகொள்ள வாய்ப்பு வழங்கபட்டது. பின்பு, இரண்டு குழுக்களிலும் முன்னிலை பெறும் தலா இரண்டு அணிகள் அரையிறுதிபோட்டியில் போட்டியிட தகுதிகொண்ட வகையில் போட்டிகள் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக, ஆர். பிரேமதாஸ மைதானத்தில் அனைத்து போட்டிகளும் பகல் போட்டிகளாகவும், பகலிரவுபோட்டிகளாகவும் இடம்பெற்றிருந்தன.

முதலாவது சுற்றில், குழு 'ஏ' இல் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலிய பல்கலைக்கழக அணிகளும், குழு 'பி' இல் பெரிய பிரித்தானியா, இலங்கை, பங்களாதேஷ் பல்கலைக்கழக அணிகளும் வகைப்படுத்தபட்டிருந்தன. குழு 'ஏ' இன் முதலாவது சுற்று போட்டிகளின் முடிவில், இந்தியா அணி முதலாவது இடத் தையும், பாகிஸ்தான் இரண்டாவது இடத்தையும் பெற்று அரையி றுதி போட்டிகளுக்கு தெரிவாகியிருந்தது. இக்குழுவில் ஆஸ் திரேலிய பல்கலைக்கழக அணி ஒரு போட்டியில் மட்டும் பாகிஸ் தான் பல்கலைக்கழக அணியை தோற்கடித்திருந்ததுடன், இந் தியாவுடனான இரண்டு போட்டிகளையும் இலகுவான முறையில் கைநழுவ விட்டிருந்தது. இதன் காரணமாக, குழு 'ஏ' இல் போட் டிதன்மை குறைவாக உள்ளபோதிலும், குழு 'பி' இல் அதற்கு எதிர் மாறாக போட்டிதன்மை கொண்ட போட்டிகளாக அமைந்திருந் தன.

அதிகம் எதிர்பார்க்கபடாத வகையில், பெரிய பிரித்தானிய பல் கலைக்கழக அணி ஆசிய ஆடுகளங்களில் மிகச்சிறப்பாக செயல்பட்டு தனது முதலாவது போட்டியில், இலங்கை பல்கலைக் கழக அணியையும், அடுத்துவந்த போட்டியில் பங்களாதேஷ் பல் கலைக்கழக அணியையும் வீழ்த்தியிருந்தது. அதுபோல, எதிர் பாராத வகையில் பங்களாதேஷ் பல்கலைக்கழக அணி இலங் கை பல்கலைக்கழக அணியுடனான முதலாவது போட்டியில் அதிர்ச்சி வெற்றியை பதிவு செய்திருந்தது. இதன் காரணமாக, இலங்கை அணி அரையிறுதி போட்டிகளுக்கு செல்வதில் சிக்கல் நிலை காணப்பட்டது. எனினும், அடுத்ததாக மீதமிருந்த இரண்டு போட்டிகளையும் இலங்கை பல்கலைக்கழக அணி தனது அணித் தலைவர் சஹான் பெரேராவின் சகலதுறை திறமையால் வெற்றி பெற்று, பெரிய பிரித்தானியா அணியுடன் அரையிறுதிபோட்டிக் குள் நுழைந்துகொள்ள,




ஓட்ட நிகர சராசரி அடிப்படையில் இலங் கையை விட குறைவான நிலையிலிருந்த பங்களாதேஷ் பல்கலைக்கழக அணி பரிதாபமாக வெளியேறியிருந்தது.

அரையிறுதிப்போட்டியில், இலங்கை பல் கலைக்கழக அணி இந்திய பல்கலைக் கழக அணியையும், இங்கிலாந்து பல் கலைக்கழக அணி பாகிஸ்தான் பல் கலைக்கழக அணியையும் எதிர்கொண் டிருந்தன. முதலாவது டுவெண்டி 20 அரையிறுதி போட்டியில், இந்திய பல் கலைக்கழக அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது. முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய பல்கலைக்கழக அணி 210 ஓட்டங்களை பெற்றுக்கொண் டமை இலங்கை அணியின் அரையிறுதி வாய்ப்புக்களை குறைத்திருந்தது எனலாம்.

ஆனாலும், இலங்கை அணியின் தலைவர் சஹான் பெரோரா இறுதி வரை போராடியிருந்த போதிலும், இலங்கை அணியால் வெற்றி பெற்றிருக்க முடியவில்லை.

இரண்டாவது அரையிறுதி போட்டியில், பெரிய பிரித்தானிய பல்கலைக்கழக அணி பாகிஸ்தான் பல்கலைக்கழக அணியின் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல், இலகுவான முறையில் போட்டியை நழுவவிட்டிருந்தது. இதன் காரணமாக, மீண்டும் ஒருமுறை RED BULL சர்வதேச டுவென்டி 20 போட்டியின் இறுதிப்போட்டியில் ஆசியாவின் பரம எதிரிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் பங்குகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. கடந்த முறையும், இந்த இரண்டு அணிகளும்தான் இறுதிப்போட்டியில் பங்குபற்றியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பகலிரவு போட்டியாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் பல்கலைக்கழக அணி இந்திய பல்கலைக்கழக அணியை துடுப்பெடுத்தாட பணித்திருந்தது. 20 ஓவர்கள் முடிவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை இந்திய அணி பெற்றுக்கொண்டதுடன், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் பல்கலைக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களை மட்டுமே பெற்று, 49 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது. இது இந்திய பல்கலைக்கழக அணியொன்று RED BULL கிண்ணத்தை கைப்பற்றும் இரண்டாவது சந்தர்ப்பமாகும்.

இந்த போட்டிகளின் அடிப்படையில், Red Bull டுவென்டி 20 கிரிக்கெட் போட்டிகளின் முக்கிய நோக்கங்களில் ஒன்றான, கல்விகற்கும் சமூகத்திலிருந்தும் திறமையானவர்களை வெளிக்கொண்டுவரும் செயல்பாடு பெருமளவில் பூர்த்தியடைந்திருக்கிறது எனலாம். குறிப்பாக, திறமைகளை வெளிபடுத்திய வீரர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் அவர்களது கிரிக்கெட் சபைகளால் கண்காணிக்கப்பட்டு அடுத்தகட்டத்துக்கு எடுத்து செல்லப்பட வேண்டியவர்களாவர். குறிப்பாக, இந்த தொடரில் துடுப்பாட்டத்தில் இந்தியாவின் ஜஸ்கரன் சிங் ஆறு போட்டிகளில் மூன்று அரைச்சதங்கள் உள்ளடங்களாக 277 ஓட்டங்களையும், குரிந்தர் சிங் ஒரு சதம் உட்பட 242 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இவர்களில் ஜஸ்கரன் சிங் இந்தியாவின் மிகச்சிறந்த விக்கெட் காப்பாளராகவும், அதிரடி ஆட்டக்காரராகவும் அணிக்குள் செயல்பட்டு வருபவர். இந்தியாவின் யுவராஜ் சிங் போன்ற தோற்றமும், அவரைப் போலவே துடுப்பெடுத்தாடும் விதமும், போட்டிகளை பார்க்கவந்த ஆர்வலர்களால் பெரிதும் சிலாகித்து பேசப்பட்டது. இந்தப்போட்டிகளுக்கு வரும்போதே, ஜஸ்கரன் சிங்க்கு ஐ.பி.எல் அணியின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டதாக Red Bull சர்வதேச டுவென்டி 20 போட்டிகளின் முடிவில் அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, சிலசமயங்களில் இவரை எதிர்வரும் போட்டிகளில் அணியில் எதிர்பார்க்கலாம். இவரைப்போலவே, குரிந்தர் சிங் ஒரு மிகச்சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் ஆவார். துடுப்பால் மட்டுமன்றி, பந்துவீச்சிலும் அணியை பலசமயங்களில் காப்பாற்றியிருக்கிறார்.

பாகிஸ்தான் அணியைச் சார்ந்த அமர் ஹசன் மற்றும் பாராஸ் அலி ஆகியோருக்கு இது முதலாவது சர்வதேச போட்டியாக அமைந்துள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் பாகிஸ்தான் 19 வயதுக்குட்பட்ட அணியில் உள்வாங்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகமாக உள்ளதாக அணியின் ஆலோசகர் மொயின்கான் RED BULL போட்டிகளின் முடிவில் தெரிவித்திருந்தார். இவர்களைப் போலவே, இலங்கை பல்கலைக்கழக அணிக்காக அணித்தலைவர் சஹான் பெரெரா திறமையாக செயல்பட்டிருந்தபோதிலும், இந்திய – பாகிஸ்தான் அணிவீரர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் போல, கிடைக்கபெறுமா? என்பது சந்தேகமே! அதேபோன்று, Red Bull டுவென்டி 20 போட்டிகளில் அழுத்தங்களுக்கு மத்தியிலும் பலவீரர்கள் பந்துவீச்சில் பிரகாசித்து இருந்தார்கள். இந்தியாவின் குரிந்தர் சிங் 16 விக்கெட்டுக்களையும், பெரிய பிரித்தானியாவின் லோமஸ் மற்றும் இந்தியாவின் ரதான் சிங் ஆகியோர் தலா 10 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பந்துவீச்சாளர்களிலும் இந்திய பல்கலைகழக அணியின் ஆதிக்க நிலையை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, இவர்கள் இலங்கை ஆடுகளங்களின் சாதகத்தன்மையை அதிக அளவில் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றே சொல்லலாம். இவர்களை விட, பந்துவீச்சாளர்கள் வரிசையில் அதிகம் பிரமிக்கவைத்தவர்கள் என்று சொல்ல கூடியவர்கள் பெரிய பிரித்தானிய பல்கலைகழக அணியை சார்ந்த லோமஸ் மற்றும் ரோப் வூலி ஆகியோர் ஆவார்கள். இங்கிலாந்து போன்ற பெரிய அணிகள் இலங்கை ஆடுகளங்களில் பந்துவீச தடுமாறிக் கொண்டிருக்கும் வேளையில், இளைய வீரர்கள் தங்களது திறமையை சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருந்தார்கள். குறிப்பாக ரோப் வூலி பெரிய பிரித்தானியா பல்கலைக்கழக அணியின் தலைவரும், சகலதுறைவீரரும் ஆவார். குறிப்பாக, இவர் எதிர்காலத்தில் இங்கிலாந்து அணியில் நிச்சயமாக விளையாடுவார் என்று, இவரின் திறமை வெளிப்பாடுகளை பார்த்தபின்பு ஆஸ்திரேலியா அணியின் பயிற்றுவிப்பாளராக வந்திருந்த ஜெவ்ரி லோசன் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று, பாகிஸ்தான் பல்கலைகழக அணியை பிரதிநிதித்துவப்படுத்திய சகாசிப் கான், சயிட் அவ்ரிடி போலவே, அதிரடியாக துடுப்பெடுத்தாடியதுடன், அவரைப்போலவே சுழல் பந்துவீச்சு முறையிலும் ஈடுபட்டிருந்தார். இவரும் எதிர்கால 19 வயதுக்குட்பட்ட அணியில் உள்வாங்கக் கூடிய சாத்தியப்பாடுகள் உள்ளதாக, மொயின்கான் குறிப்பிட்டிருந்தார்.

RED BULL சர்வதேச டுவென்டி 20 போட்டிகள் இலங்கையில் முடிவுக்கு வந்திருந்தாலும், இந்த போட்டிகளின் தொடர்ச்சியாக, சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியை ஏனைய அணிகளில் விளையாடிய சிறந்த வீரர்கள் உள்ளடங்கிய பதினொருவர் அணி எதிர்வரும் யூன் மாதத்தில் இந்தியாவில் சந்திக்க இருக்கிறது. இந்த போட்டிக்கான அறிவிக்கப்பட்ட அணியில், பாகிஸ்தான் சார்பாக 5 வீரர்களும், இலங்கை சார்பாக 3 வீரர்களும், பங்களாதேஷ் சார்பாக 3 வீரர்களும், ஆஸ்திரேலியா மற்றும் பெரிய பிரித்தானியா சார்பில் தலா 2 வீரர்களும் போட்டியில் பங்குபெற்ற தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, சிறந்த கல்விமட்டத்தை கொண்ட, பல இளம்வீரர்களை எதிர்வரும் காலத்தில் பல்வேறு தேசிய அணிகளில் உள்வாங்கிக்கொள்ள மிகச்சிறந்த போட்டிகளாக இந்த வருட போட்டிகள் முடிவுக்கு வந்திருக்கிறன.


யாழ். மாவட்ட அணி

# சொந்த மண்ணில் சூரர்கள்




■ தி.தரணீதரன்

பல்வேறு விதமான நெருக்கடிகள் அழுத்தங்களுக்கு மத்தியில் ஆரம்பமான இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான "போர்டர் - கவாஸ்கர்" கிண்ண கிரிக்கெட் போட்டிகள் பல்வேறு திருப்பங்களையும், நெருக்கடிகளையும் ஏற்படுத்திவிட்டு நிறைவு பெற்றிருக்கிறன.

இந்த தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே இதுவொரு 'பழிவாங்கும் தொடர்' என்று பலரும் கூறிக்கொண்டாலும் இந்திய அணி நெருக்கடியோடும், பின்னடைவுகளோடுமே இந்த தொடரை எதிர்கொண்டது. இதற்கு பிரதான காரணமாக இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை இந்திய அணி சொந்த மண்ணில் வைத்து 2 : 1 என்ற கணக்கில் பறிகொடுத்தமையே ஆகும்!. இதைவிடவும் எப்போதுமே பகைமை பாராட்டும் பாகிஸ்தானிடமும் இந்திய அணி ஒரு நாள் தொடரை பறிகொடுத்திருந்தது. இவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் பலம் வாய்ந்த ஆஸ்திரேலியாவை இந்தியாவால் எதிர்கொள்ள முடியாது என்றே பலரும் எண்ணிக் கொண்டார்கள்.

இந்த தொடரிலும் இந்தியா தோல்வியை சந்திக்குமாக இருந்தால் இந்திய கிரிக்கெட் வாரியம் விரும்பியோ விரும்பாமலோ இரண்டு கடின முடிவுகளை எடுக்க நேரிட்டிருக்கும். அதாவது பயிற்றுவிப்பாளர் டங்கன் ப்லேட்சேரை ஓரம்கட்ட நேரிட்டிருக்கும். சிலவேளைகளில் இந்திய ரசிகர்கள் இதனை விரும்பியிருப்பார்கள் கங்குலியின் வரவுக்காக...

ஆனால் இன்னுமொரு கடின முடிவு என்று சொன்னால் அது தோனியின் தலைமைத்துவம் பற்றியதாக அமைந்திருக்கும். இளம் வீரர் விராட் ஹோலியை அணித்தலைவராக்கும் முயற்சியில் பல முன்னாள் வீரர்கள் ஆதரவு மற்றும் எதிர்க்கருத்துக்களை தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு முடிவுகளும் எடுக்கப்படாமல் ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தியாவை காப்பாற்றியிருக்கிறார்கள். இந்திய கிரிக்கெட் நிர்வாகம் தோனி மீது வைத்திருந்த அதீத நம்பிக்கையை அவர் மீண்டும் காப்பாற்றியிருக்கிறார்.

தோனியின் தலைமை காப்பாற்றபட்டமையும், பயிற்றுவிப்பாளர் டங்கன் ப்லேட்சேருக்கு ஓராண்டு நீடிப்பு வழங்கபட்டமைக்கும் ஆஸ்திரேலிய தொடர் காரணமாக அமைந்தமையை யாரும் மறுக்க முடியாது.

முதலாவது டெஸ்ட் போட்டி சென்னையில் நடந்த போது ஆஸி 8 விக்கெட்களால் தோற்றது. இரண்டாவது போட்டி ஹைதராபாத்தில் நடந்த போது இன்னிங்ஸ் மற்றும் 135 ஓட்டங்களாலும் தோற்றுப் போனது. பின் மூன்றாவது மற்றும் நான்காவது போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட்களால் அவமானகரமாக தோல்வியை சந்தித்து தொடரை 4 : 0 என்ற அடிப்படையில் பறிகொடுத்தது.

கடந்த ஆண்டு பலம் வாய்ந்த இந்திய அணிதான் ஆஸ்திரேலிய சென்று 4 : 0 என்று தொடரை பறிகொடுத்தது. ஆனால் இந்தியா சென்ற ஆஸ்திரேலிய அணிகளுக்குள்ளேயே இம்முறை சென்ற அணிதான் அனுபவமும் திறமையும் குறைந்த அணி என்றும் சொல்லப்படுகிறது. டிராவிட், லக்ஷ்மன், சேவாக், கம்பீர், சகீர் கான், ஹர்பஜன் என்று பலம்வாய்ந்த இந்திய அணி படுதோல்வி அடைந்தமைக்கு ஒரு அனுபவமில்லாத அணியை இந்தியா சொந்த மண்ணில் வைத்து பழி தீர்த்திருக்கிறது.

இந்த தொடர் இரு நாட்டு அணிகளுக்கும் பல படிப்பினைகளை கொடுத்திருக்கிறது. ஆஸ்திரேலியாவை பொறுத்தவரை முக்கியமான இரண்டு ஆட்டக்காரர்களான பொண்டிங் மற்றும் மைக்கேல் ஹஸி ஆகியோரது அனுபவத்துக்கும், திறமைக்கும் ஈடு கொடுக்க கூடிய வீரர்களை இதுவரை சரியாக இனம் காண முடியாது போயிருக்கிறது. இத்தோடு ஆசிய உபகண்டத்தில் மைதானத்தின் தன்மைக்கு ஏற்ப வீரர்களை தேர்வு செய்வதிலும் அந்த அணி தோற்று போயிருக்கிறது.

ஷேன் வோர்ன் போன்ற உலக தரம் வாய்ந்த இன்னுமொரு ஒரு சுழல்பந்தாளனை கண்டு பிடிப்பதில் எப்போதும் ஆஸ்திரேலியா தடுமாறியே வருகிறது. ல்யோன் மற்றும் டோஹர்ட்டி ஆகியோர் எதிர்பார்த்த அளவில் இந்திய மண்ணில் பிரகாசிக்காமையும் அவர்களது தோல்விக்கு காரணமாய் அமைந்துவிட்டது.

# மீண்டும் நிரூபித்த இந்தியா

ஆனாலும் இந்தியாவை பொறுத்தவரையில் இவ்வாறான எந்த ஒரு வெற்றிடத்தையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஒருகாலத்தில் எல்லோராலும் சொல்லபட்ட பல விடயங்கள் இந்த தொடரில் பொய்யாக்கபட்டிருக்கின்றன. டிராவிடின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்று சொல்லபட்டது. ஆயினும் டிராவிட்டின் இடத்தை நிரப்ப முடியாவிட்டாலும் டிராவிட் இல்லாத குறையை ஓரளவுக்கு ஈடு செய்தவர் இளையவீரர் புஜரா. தனக்கு கிடைத்த வாய்ப்பை கெட்டியாக பயன்படுத்தி இருக்கிறார். டிராவிட்டின் ஓய்வுக்கு பின்னர் அவர் சந்தித்த முக்கிய அணிகளான நியூஸிலாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா என்று பலம்வாய்ந்த அணிகளுக்கு எதிராக மிக நன்றாகவே துடுப்பாடி தான் யார் என்பதை தேர்வாளர்களுக்கு நிரூபித்துள்ளார்.


இதேபோன்று இன்னுமொரு மூத்த வீரர் லக்ஸ்மனது இடத்தை வளர்ந்து வரும் வீரர் விராத் கோலி பிடித்துவிட்டார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக எப்போதும் பிரகாசிக்கும் ஹர்பஜன் எதற்கு என்கின்ற வகையில் இம்முறை இந்திய சுழல் பந்து ஜோடி சாதித்தது. அஸ்வின், ஓஜா, ஜடேஜா என்று மூவரும் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வரிசையை ஆட்டங்காண செய்திருந்தார்கள்.

இவற்றையெல்லாம்விட சேவாக் போன்று ஒரு டெஸ்ட் ஆரம்ப வீரரையும் அடையாளப்படுத்திய தொடராக இந்த தொடர் முத்திரை பதித்தது. ஷிகார் தவான் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கெல்லாம் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருந்தார். அறிமுக போட்டியிலேயே வேகமான சத்தத்தை பெற்றதோடு 187 ஓட்டங்களையும் பதிவு செய்தார்.

இன்னுமொருவரையும் இந்திய ரசிகர்கள் மறந்திருக்க வாய்ப்பில்லை. அவர்தான் இந்திய டெஸ்ட் அணியில் சகல துறை ஆட்டகாரராக இடம் பிடித்து அசத்திய ஜடேஜா. இவரது சுழலில் சிக்கி ஆஸ்திரேலியாவின் கிளார்க் 5 தடவை ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழக வீரர் முரளி விஜய் டெஸ்ட் போட்டிகளில் நிரந்தர ஆரம்ப வீரர் என்பதை உறுதி செய்யும் முகமாக துடுப்பாடி இந்த தொடரில் மொத்தமாக 430 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தார். (புஜாரா -419, டோனி -326, கோலி -284, சச்சின் -192 ஓட்டங்களையும் பெற்று துடுப்பாட்டத்தில் சாதித்தனர்).

பந்து வீச்சை பொறுத்தவரையில், அஸ்வின் -29, ஜடேஜா-24, ல்யோன் -15, என்று சுழல் பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.




எது எவ்வாறாயினும் இது போன்றதான வெற்றிகளை வெளிநாட்டு மண்ணிலும் இந்தியாவால் பெற முடியுமா என்ற கேள்வியை பலரும் முன்வைக்கின்றனர். இதற்கு இனி வரும் காலங்களில் இந்திய அணி பதில்சொல்லும் என்ற நம்பிக்கை அதிக இந்திய ரசிகர்களுக்கு இருக்கிறது.

4 : 0 என்ற ரீதியில் இந்திய தொடரை வென்று இந்தியா சரித்திர சாதனை படைத்தாலும் ஒரு சோகமான முடிவும் இந்தியாவை வேதனைப்படுத்தியது. ஐ.சி.சி யின் டெஸ்ட் அணிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும் பரிசு தொகையை இந்திய அணி அதிகமாக பெறுவதற்கு ஆஸ்திரேலியாவை 4 : 0 என்று கணக்கில் தோற்கடிக்க வேண்டும். அத்தோடு நியூஸிலாந்து அணியிடம் இங்கிலாந்து இறுதி போட்டியில் தோற்க வேண்டும் என்ற நிலை இருந்தது.


ஆயினும் இந்தியா ஆஸ்திரேலியாவை தோற்கடித்தாலும் இங்கிலாந்து, நியூஸிலாந்து அணியிடம் தோற்காமல் போட்டியை இறுதி நேரத்தில் காப்பாற்றியது. அந்த போட்டியில் இங்கிலாந்தின் இறுதி விக்கெட் தகர்க்கப்பட்டால் இந்திய அணி தரவரிசையில் இங்கிலாந்தை பின்தள்ளி விட்டு 2 ம் இடத்தை பிடித்திருக்க வாய்பிருந்தது. ஆயினும் வீழ்த்தப்படாத அந்த ஒரு விக்கெட்டால் இந்திய அணிக்கு ஒரு கோடிக்கும் அதிகமான பரிசுத்தொகை இழக்கபட்டமையும் பரிதாபமே!.

இவ்வாறான பல்வேறு சாதனைகளோடு நிறைவுக்கு வந்திருக்கும் இந்திய - ஆஸ்திரேலிய தொடர் மூலம் இன்னுமொரு கேள்வி எல்லோராலும் மீண்டும் ஒருமுறை கேட்கபட்டது. சச்சின் என்கின்ற சாதனை வீரன் இந்திய மண்ணுக்கு வெளியிலா ஓய்வை அறிவிக்கப்போகிறார் என்பதே அதுவாகும். இந்திய அணி பங்கெடுக்கும் அடுத்த டெஸ்ட் போட்டி தென் ஆபிரிக்க மண்ணில் எதிர்வரும் டிசம்பரில் இடம்பெறவுள்ளமையே அதற்கான காரணமாய் அமைந்துவிட்டது.





# சாதிக்கத் தவறும் பாகிஸ்தான்



Kss.ராஜ்

கடந்த மாதம், தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரில் 3 : 0 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்தது. இரண்டு போட்டிகள் கொண்ட டுவெண்டி 20 தொடரின் ஒரு போட்டி கைவிடப்பட்ட மற்றைய போட்டியை பாகிஸ்தான் அணி வெற்றி கொண்டது. ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 3 : 2 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி போராடித் தோற்றது.

இந்த தொடரில் பாகிஸ்தான் அணியினரின் ஆட்டத்தை குறிப்பாக இளம் வீரர்களது திறமைகளைப் பார்க்கும் போது, 'கிரிக்கெட் சூதாட்டம் என்று ஒன்று வந்திருக்காவிடில் பாகிஸ் தான் தான் உலகின் நம்பர் 1 கிரிக்கெட் அணியாக இருந் திருக்கும்' என்று எண்ணத் தோன்றுகின்றது.


உலக கிரிக்கெட் அரங்கில் பல திறமையான வீரர்களைக் கொண்டிருந்தும் சாதிக்க தவறுகின்றது பாகிஸ்தான் அணி. வீரர்களுக்கு இடையில் புரிந்துணர்வு இன்மை, சூதாட்ட பிரச் சனைகள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வெற் றிகர கிரிக்கெட் பயணத்துக்கு பல இடையூறுகள் அடிக்கடி வந்து போகின்றன.

உலகில் அதிகமான இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் உருவாகுவது பாகிஸ்தானில்தான். ஆனால் வந்த வேகத் திலே சிலர் காணாமல் போய்விடுகின்றார்கள். சிலர் சூதாட் டம், உபாதைகள் போன்ற பிரச்சனைகளில் சிக்கிக்கொள் கின்றார்கள். சிலர் ஓரளவு தாக்குப் பிடித்து நின்றாலும் தொடர்ந்து சாதிக்கமுடியவில்லை.

பாகிஸ்தான் அணியை பொறுத்தமட்டில் ஒரு சிறந்த அணித் தலைவரை அண்மைக்காலமாக அந்த அணி அடையாளம் காண தவறிவிட்டது. சோர்ந்து போகின்ற பொழுதுகளில் அணிக்கு உட்சாகமும் தன்னம்பிக்கையும் வழங்க ஒரு அணித்தலைவர் கட்டாயம் ஒவ்வொரு அணிக்கும் தேவை.


அந்த வகையில் பாகிஸ்தான் அணியின் தற்போதைய ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான தலைவராக இருக்கும் மிஸ்பா உல் ஹக், வீரர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்க தவறிவிடுக்கின்றார் என்றே எண்ணத்தோன்றுக் கின்றது.

இம்சமாம் உல் ஹக் இற்கு பிறகு அப்படி ஒரு தலைவர் பாகிஸ்தான் அணிக்கு கிடைக்கவில்லை. இம்சமாம் உல் ஹக்கிற்கு பிறகு நியமிக்கப்பட்ட சொயிப் மாலிக் 2007ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது டுவெண்டி 20 உலகக்கிண் ண போட்டிகளில் இறுதிப்போட்டி வரை அணியை அழைத் துச்சென்று இருந்தார். ஆனால் இந்தியாவிடம் தோல் வியடைந்து கோப்பையை தவறவிட்டது பாகிஸ்தான் அணி.



அதன் பிறகு சில காலத்தில் சொயிப் மாலிக் தனது தலைமைப் பதவியை ராஜினாமா செய்ய, யுனிஸ்கான், மொகமட் யூசுப், சல்மான் பட், அப்ரிடி என்று பாகிஸ்தான் அணியின் தலைமைப்பதவி சரியான ஒரு வீரரிடம் சேர்க்கப் படவில்லை. இதில் யுனிஸ்கான் தலைமையில் பாகிஸ்தான் அணி டுவெண்டி 20 உலகக்கிண்ணத்தை கைப்பற்றியிருந் தது. ஆனால் அவரும் பின்னர் தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

மிகச்சிறந்த கிரிக்கெட் வீரான மொகமட் யூசுப் அணித் தலைவர் பதவியில் மட்டுமல்ல, அணியில் இருந்தே ஓரம் கட்டப்பட்டார். நீண்டகாலமாக பாகிஸ்தான் அணியில் விளையாடி வரும் அப்ரிடியிடம் தலைமைப்பதவி தேடிவந் தது. ஆனால் இது காலம் கடந்து வந்த முடிவு, எப்போதோ அப்ரிடியை தலைவர் ஆக்கியிருக்கவேண்டும். அப்ரிடி தலைமையில் ஆஸ்ரேலியா சென்ற அணி அங்கே முதல் போட்டியில் படுதோல்வியடைய அப்ரிடி டெஸ்ட் போட்டிகளில் இருந்தே ஒய்வை அறிவித்தார். இதனால் சல்மான் பட்டிடம் டெஸ்ட் போட்டிக்கான தலைமைப்பொறுப்பு வந்தது.








ஆனால் அவர் இங்கிலாந்தில் சூதாட்ட பிரச்சனையில் சிக்கியதால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்கு சோதனைகாலம் வந்தது.

2011 உலகக்கிண்ண போட்டிகள் ஆரம்பமாகிய வேளை அந்த தொடரில் பாகிஸ்தான் அணியை வழிநடத்தபோவது அப்ரிடியா, மிஸ்பா உல் ஹக்கா என்ற கேள்வி பலரிடம் இருந்தது. ஆனால் அப்ரிடியிடம் தலைமைப்பதவி வழங்கப்பட்டது. பொறுப்பை உணர்ந்த அப்ரிடி அந்த தொடரில் அணியை சிறப்பாக வழிநடத்தினார். அரையிறுதி வரை அணியை அழைத்துச் சென்றார். அரையிறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தோல்வியை தழுவிய பாகிஸ்தான் அணி. அந்த தோல்விக்கு மிஸ்பா உல் ஹக்கும் ஒரு காரணம். விரைவாக ஓட்டங்களை பெறவேண்டிய நேரத்தில் ஒரு முனையின் உமர் அக்மல் வேகமாக ஆடிய போதும் மிஸ்பா ஆமைவேகத்தில் ஆடியதால் பாகிஸ்தான் தோல்விக்கு அதுவும் ஒரு காரணமாகிவிட்டது.





உலகக் கிண்ணத்தின் பின், கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட பிரச்சனையில் அப்ரிடி தலைமைப்பதவியில் இருந்து நீக்கப்பட மிஸ்பா உல் ஹக் தலைவர் ஆனார். அனால் மிஸ்பா தலைமையில் பாகிஸ்தான் அணி பெரிதாக சாதிக்கவில்லை.

தற்போது டுவென்டி 20 போட்டிக்கான தலைவராக இருக்கும் ஹபீஸ் சிறப்பாக அணியை வழிநடத்துகின்றார். தற்போது 38 வயதாகும் மிஸ்பா உல் ஹக்கிடம் இருந்து டெஸ்ட், ஒருநாள் போட்டிகளின் தலைமைப் பதவியையும் ஹபீஸிடம் கொடுக்கலாம்! கொஞ்சக்காலம் அவரை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கவேண்டும்.

தற்போது பல இளம் வீரர்கள் பாகிஸ்தான் அணிக்கு கிடைத்துள்ளார்கள். குறிப்பாக யுனைட்கான் மிகச்சிறந்த வேகப்பந்துவீச்சாளராக தனது அறிமுகத்தை அழுத்தமாக பதித்திருக்கின்றார். இதேபோலேவே அவர் தனது திறனை வெளிப்படுத்தும் பட்சத்தில் உலக தரம் வாய்ந்த வீரராக உருவாக சந்தர்ப்பம் இருக்கின்றது. சொயிப் மாலிக், அப்ரிடி, மிஸ்பா, கம்ரன் அக்மல், உமர் குல், யுனிஸ்கான், ஹபீஸ் என்று பல சிறந்த வீரர்கள் இருந்தும் பாகிஸ்தான் தடுமாறுகின்றது. இவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து விளையாடவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்துள்ளது பாகிஸ்தான் அணி. நிச்சயம் இந்த தோல்வி வீரர்களை மனரீதியாக சோர்வடைய வைத்திருக்கும். இதில் இருந்து இவர்கள் மீண்டு அடுத்த போட்டிகள் பற்றி சிந்திக்கவேண்டும். அணியின் சிரேஷ்ட வீரர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து விளையாட வேண்டும்.

இளம் வீரர்கள் தங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

முக்கியமாக வீரர்களை உட்சாகப்படுத்தும், ஊக்கம் அளிக்கும் ஒரு அணித்தலைவர் வேண்டும். மிஸ்பாவை நீக்கிவிட்டு ஹபீஸிடம் பாகிஸ்தான் அணியின் தலைமைப்பொறுப்பை ஒப்படைக்கலாம். இவரை தவிர பொருத்தமான வீரர்கள் யாரும் தற்போது பாகிஸ்தான் அணியில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அப்டிரி, ஹாபீஸ் என சிரேஷ்ட வீரர்கள் பலரும் 32ஐ தாண்டி வயதுகளில் இருப்பதால் பாகிஸ்தான் அணிக்கு விரைவில் புதிய இளம்வீரர் ஒருவரை தலைவராக நியமிக்க வேண்டும். இது, பாகிஸ்தானின் அணியின் நீண்ட கால தலைவர் பொறுப்பாக இருக்கும் படியும் கவனித்துக்கொள்ள வேண்டும். இலங்கை அணிக்கு பல இளம்வீரர்களை உருவாக்கிய முன்னாள் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தற்போது பாகிஸ்தான் அணிக்கு பயிற்றுவிப்பாளராக செயற்படுவதால் விரைவில் அந்த புதிய இளம் அணித்தலைவரை கண்டறிந்து விடுவார் என்றே நம்பலாம். புதிய தலைமையுடன் மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டில் தனது முத்திரையை பதிக்குமா பாகிஸ்தான் அணி என்று பொறுத்திருந்து பார்போம்.






**பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா சுற்றுத்தொடர் 2013**

**முதல் டெஸ்ட் :**
தென்னாபிரிக்கா 211 ஓட்டங்களால் வெற்றி
**இரண்டாவது டெஸ்ட் :**
தென்னாபிரிக்கா 4 விக்கெட்டுக்காளால் வெற்றி
**மூன்றாவது டெஸ்ட் :**
தென்னாபிரிக்கா இன்னிங்ஸ், 18 ஓட்டங்களால் வெற்றி

**முதல் டுவென்டி 20 :** கைவிடப்பட்டது
**இரண்டாவது டுவென்டி 20 :**
பாகிஸ்தான் 95 ஓட்டங்களால் வெற்றி

**முதல் ஒருநாள் :**
தென்னாபிரிக்கா 125 ஓட்டங்களால் வெற்றி
**இரண்டாவது ஒருநாள் :**
பாகிஸ்தான் 6 விக்கெட்டுக்களால் வெற்றி
**மூன்றாவது ஒருநாள் :**
தென்னாபிரிக்கா 34 ஓட்டங்களால் வெற்றி
**நான்காவது ஒருநாள் :**
பாகிஸ்தான் 3 விக்கெட்டுக்களால் வெற்றி
**ஐந்தாவது ஒருநாள் :**
தென்னாபிரிக்கா 6 விக்கெட்டுக்களால் வெற்றி

# நம்மூரு கிளித்தட்டு



செல்வராஜா
காண்டீபன்

கிரிக்கட், கால்பந்து போல எந்நாட்டவருக்கும் பொதுவான விளையாட்டுக்கள் அல்லாமல் தமிழர்கள் மட்டுமே விளையாடும் பல விறுவிறுப்பான விளையாட்டுக்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் விளையாடும் பல பாரம்பரிய விளையாட்டுக்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தோமானால் நிச்சயம் அவை எமது மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்வைத் தருபவையாகத்தான் இருக்கும்.

பொழுதைப்போக்குவதற்கு எத்தனையோ வழிகள் இருந்தும் இன்றும் பலர் வீடுகளினுள் சோம்பேறிகளாக முடங்கிக் கிடக்கின்றார்கள். ஆனால் 50 வருடங்களுக்கு முந்திய எங்கள் பேரன், பூட்டன் காலத்திலும் அதற்கு முந்திய காலங்களிலும் எந்தவொரு களியாட்ட நிகழ்வுகளும் இல்லாமல் தங்கள் நேரத்தை திறம்பட எம்முன்னோர் செலவளித்து வந்தார்கள். அவர்களின் அரிய கண்டு பிடிப்புக்கள் தான் எங்கள் பாரம்பரிய விளையாட்டுக்கள். 'வெள்ளைக்காரன்' விளையாட்டுக்களில் கிடைக்காத புது அனுபவங்கள் எல்லாம் அதில் கிடைக்கும்.

அப்படியான நமக்கே உரித்தான ஒருவிளையாட்டுத் தான் "கிளித்தட்டு". இதனை ஊருக்கு ஊர் 'தாச்சி, யாடு' என பல்வேறு பெயர்களால் அழைப்பார்கள். கிளித்தட்டு, வரைமுறைகள் அற்ற சாதாரண விளையாட்டல்ல. இதை விளையாடுவதற்கு பல நெறிமுறைகள் இருக்கின்றன. கிராமிய மட்டங்களில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டிகளிலும், கிராமிய பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் இதனை விளையாடுவார்கள். இலங்கையில் அதி உச்சமாக "மாவட்ட மட்டம்" வரை இந்த போட்டிகள் கொண்டு செல்லப்படும்.

ஆனால் இன்றோ இந்த விளையாட்டை எமது பெரும்பான்மையான பாடசாலைகள் விளையாடுவதில்லை. ஓரிரு பின்தங்கிய கிராமப்பாட-சாலைகளில் மாத்திரம் விளையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. சட்ட வரைமுறைகளோடு விளையாடும் இந்த விளையாட்டை சரிவர பயிற்றுவிப்பதற்குக் கூட பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இப்படியே பாரமுகமாக இருந்தோமானால் இனி வரும் காலத்தில் 'googleல்' மட்டுமே எமது பாரம்பரிய விளையாட்டுக்களைத் தேட முடியும்.

**விளையாடப்படும் முறை :** மைதானத்தை முதலில் கட்டங்களாக பிரிக்க வேண்டும். எத்தனை கட்டங்கள் என்பது விளையாட்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்தது. குறைந்தது ஒரு குழுவுக்கு 3 உறுப்பினர்களாவது வேண்டும். யார் நாணய சுண்டலில் தோற்கின்றார்களோ அவர்கள் மறிப்பார்கள், மற்ற குழு புகுவார்கள். மறிக்கும் அணியினர் முதலாம் கோட்டையும், கடைசி கோட்டையும் தவிர மற்றக் கோடுகளில் நிற்பார்கள். மிகுதியான மறிக்கும் அணியை சேர்ந்தவர் கிளி என்று அழைக்கப்பட்டு, அவர் எந்த கோடுகளாலும் செல்ல வல்லவர். கிளியால் தொடப்பட்டால் புகும் குழு உறுப்பினர் ஆட்டமிழப்பார்.

முதலில் கிளி ஒரு தொங்கலிலும், புகுபவர்கள் ஒரு தொங்கலும் நிற்பார்கள். கிளி கூவிக்கொண்டு முன்னோக்கி வருவார். கிளி கூவியவுடன் புகுபவர்கள் உச்சி, தெண்டி அடுத்த எல்லைக்கு செல்ல முயல வேண்டும். தாண்டும் பொழுது மறிப்பவரால் தொடப்பட்டால் தாண்டுபவர் ஆட்டமிழப்பார். தாண்டும்போது மட்டுமே மறுப்பவர் தட்ட முடியும், சும்மா அருகில் நிற்கும் பொழுதோ, உச்சும் பொழுதோ தட்ட முடியாது. ஆனால், கிளி எங்கும் சென்று யாரையும் எப்பொழுதும் தட்டலாம். அதாவது, எட்டியும் தட்டலாம்.

உச்சி, தப்பி எல்லைக்கு சென்றவர்கள் பழம் என்று கருதப்படுவர். வந்து கொண்டிப்பவர்கள் காய்கள். பழமானவர், மீண்டும் புகுந்த எல்லைக்கே சென்றால் தான் அந்த அணியினருக்கு ஒரு புள்ளி கிடைக்கும். ஆனால், மீண்டும் வரும் பொழுது, பழம் காய் உள்ள ஒரு பெட்டிக்கு போகவது அவ்வளவு நல்லதல்ல, காரணம், இருவருக்கும் உச்சுவதற்கு குறுகிய இடமே கிடைக்கும். மேலும், கிளி பூட்டு போட்டு தட்ட முயல்வார்.

எந்த அணி கூடிய புள்ளிகளைப் பெறுகின்றதோ அவர்களுக்கே வெற்றி. பலருடன் சேர்ந்து விளையாடும் பொழுது, இந்த விளையாட்டு மிகவும் வேகமாகவும், விறு விறுப்பாகவும் அமையும்.



படம் : தமிழரசு வலைப்பூ

# யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டம் பல்கலை. அணி சம்பியன்



யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் மற்றும் இளையோர் அமைப்பு ஆகியன இணைந்து, மக்கள் வங்கியின் அனுசரணையில் யாழ். மாவட்ட 18 வயதுக்கு மேற்பட்ட வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த மாதம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தியது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும், இராமநாதன் கல்லூரி அணியும் தெரிவா-கின. இப்போட்டியின் முதற்சுற்றை சிறப்பான முறையில் விளையாடி 11:09 என்ற புள்ளிகள் கணக்கில் இராமநாதன் கல்லூரி வென்றது. எனினும் இரண்டாவது சுற்றில் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்திய யாழ். பல்கலைக்கழக அணி இரண்டாம் சுற்றினை 11:05 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றி ஆட்டத்தில் விறுவிறுப்பினை ஏற்படுத்தியது. தொடர்ந்து 3ஆம், 4ஆம் சுற்றுக்களிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திய பல்கலைக்கழக அணி, 14:06, 15:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் அச்சுற்றுக்களையும் கைப்பற்றியது. இறுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 49:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று மாவட்ட வலைப்பந்தாட்டச் சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியில், சிறந்த புள்ளி பெற்ற வீராங்கனையாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த என்.மனோசினியும், சிறந்த தடுப்பாட்ட வீராங்கனையாக இராமநாதன் மகளிர் கல்லூரி அணியைச் சேர்ந்த எஸ்.கோபிகாவும், சிறந்த மத்தியவரிசை வீராங்கனையாக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ரி.அபிதாவும் தெரிவு செய்யப்பட்டனர். இச்சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல வலைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகளிர் கிரிக்கெட்
### வடமராட்சி மத்தி. சம்பியன்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணியைத் தோற்கடித்து சம்பியனாகியுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்களைக் கொண்ட இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இறுதிப்போட்டியில், நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்ற வடமராட்சி மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் அபிராயினியின் அதிரடித் துடுப்பாட்டம் மூலம் அவ்வணி 86 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அபிராயினி மூன்று சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் உள்ளடங்களாக 34 ஓட்டங்களைப் பெற்றார்.

87 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வடமராட்சி மத்திய கல்லூரி அணி வீராங்கனைகளின் பந்துவீச்சுக்களை சமாளிக்க முடியாமல் 54 ஓட்டங்களுக்குள் சகல விக்கட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் வடமராட்சி மத்திய கல்லூரி சார்பாக அபிராயினி, தரணிகா ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும், கஜமுகி இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இத்தொடரின் மூன்றாமிடத்தினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.


### கேடயம் மாத இதழ் சந்தா மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் : ..........
2. பால் : .......... 3. பிறந்த திகதி : ..........
4. அடையாள அட்டை இல : ..........
5. முகவரி : ..........
6. தொலைபேசி எண் : ..........
7. மின்னஞ்சல் முகவரி : ..........
8. மாணவராயின் :
பாடசாலையின் பெயர் : ..........
கல்வி கற்கும் தரமும் பிரிவும் : ..........

திகதி : .......... கையொப்பம் : ..........

வங்கியில் வைப்புச் செய்து பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் நீங்களாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தை இணைத்து எமது முகவரிக்கு அனுப்புவதன் ஊடாக, அல்லது யாழ். பிரதான தபாலகத்தில் மாற்றக்கூடியதாக மேற்படி பெயருக்கு காசுக்கட்டளை அனுப்புவதன் ஊடாக சந்தாதாரர்களாக இணையலாம். மாதந்தோறும் 'கேடயம்' சஞ்சிகை உங்கள் வீடு தேடி வரும்.

கேடயம் சஞ்சிகை,
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
சுன்னாகம்.

வங்கிக் கணக்கு விபரம்

K.Varothayan
Vadduvini Lane,
Inuvil west, Chunnakam.

Commercial Bank
Saving A.C No : 8100056418
Branch : Wellawatta.

சந்தா தொடர்பான விபரங்கள் – இலங்கையின் எப்பாகத்திற்கும்

மூன்று மாதங்களுக்கு : 200ரூபாய்
ஆறு மாதங்களுக்கு : 350ரூபாய்

(தபால் செலவு உட்பட)

லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு 'கேடயம்' சஞ்சிகையை சந்தைப்படுத்தக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். (ஏற்கனவே வேறு சஞ்சிகைகளை சந்தைப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் விரும்பத்தக்கது)



'கேடயம்' விளையாட்டுச் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு கடந்த வருடம் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்றது. சஞ்சிகை வெளியீட்டையும், அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.



'கேடயம்' விளையாட்டுச் சஞ்சிகையின் அறிமுக நிகழ்வு கடந்த வருடம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. நிகழ்வில், விருந்தினர்கள் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



Vilvas
Sports Showroom
"A Marvelous place Where Real athletics Wanna Purchase."
Everything Related to Sports, Under one Roof
Proprietor
A.K.Amalan
K.K.S. ROAD, INUVIL. TEL : 0772298867, 0750324181.


Modern Star Class Hotel in Jaffna in the Heart of the City
Offers Friendly Spacious and Comfortable accommodation to guests
TILKO
TILKO JAFFNA CITY HOTEL
42 Luxurious rooms
Banquet hall
Conference hall
Restaurant/bar
Tour of Jaffna Peninsula
Herbal beauty care centre
Swimming Pool
Gymnasium/spa
WELCOME TO TILKO HOLIDAY
Banquet hall
Gymnasium
Swimming Pool
Restaurant
bar
Luxurious rooms
Tilko Jaffna City Hotels (Pvt) Ltd
We care and it shows
TILKO hotels
Fax : 0094 21 222 7291
Mob: 0094 77 106 4385 / 0094 77 991 2628
0094 21 222 5969 / 0094 21 720 0707
web : www.cityhoteljaffna.com e-mail : info@cityhoteljaffna.com